அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 33 | பெப்ரவரி 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055



## குறிவைக்கப்படுகிறதா தமிழர் வளங்கள்?

## இடப்பெயர்வும் நானும்

## கரிநாள்

04/02/2024

## வாழ்க்கை

## வணங்குகிறோம் ஐயா!!

## அனுரவின் இந்தியப் பயணம்



# வணங்குகிறோம் ஐயா!!

ரணமாகிக் கனக்குது இதயம்!
எத்தனை கோடி தமிழர்
இருந்தென்ன?
அரைநாள் பொழுது தூரத்தில்
பெற்ற தாயிருந்தும்
விழிமூடுமுன்
தன் தாயை
காணக் கிடைக்காத
ஒரு சிறைப்பறவை
மனம் கொள்ளா சுமையுடன்
விண்ணேகியது!!

மனிதம் தொலைத்தவர்கள்..
இவர்கள்
மானிடப் பிறப்பிற்கே
இழுக்கு!
தாயின் கதறலைக்
காதிலும் வாங்கவில்லை.

விடுதலையின் பின்னும்
தாயுடன் சேய் சேர
தடை போட்டவர்கள்
இவர்கள்
மனிதம் தொலைத்தவர்கள்.
மானிடப் பிறவிக்கே இழுக்கு!

கம்பியின் பின்னே
கழித்த வருடங்கள்
சாந்தனின்
மூப்பை
முன்னோக்கி
நகர்த்தியிருந்தன!

கண்காணாமல்
அனுபவித்த சித்திரவதைகள்
- அவரை
கோதுபோல் ஆக்கி
வெளியே உமிழ்ந்தன!

வெளியே வந்துதானென்ன?
அகதி முகாம்
அடுத்த வதைமுகாமானது!

கொடிய
முப்பத்து நான்காண்டுகள்..
உள்ளுறுப்புகளை அரித்துத்
தின்றது
சிறைவாசம்!

அம்மா!! என்றழைத்து
மகன் வருவான் இன்று
என்று
கண் பூத்திருக்க
காத்துக் கிடந்த தாய்
சருகாகி வீழ்ந்த பின்தான்
தாய்மடி ஏகினான்
என்றறிந்தாள்.
ஆற்ற முடியுமா இல்லை
தேற்றத்தான் முடியுமா?

கனத்த இதயத்துடன்
துயர் பகிர்கிறோம்.
எம்மவர்க்காக
உம்முடல் சிதைந்தீர்!
இமயம் போல் உயர்ந்தீர்!
ஐயா!!
கரம் கூப்பி வணங்குகிறோம்!

பொழில்

எழுநிலம்
EZHUNILAM
மாத இதழ் | மணம்: 33
பெப்ரவரி
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| குறிவைக்கப்படுகிறதா... | 06 |
| அனுரவின்... | 09 |
| இலங்கையில் தொடரும்... | 12 |
| இடப்பெயர்வும் நானும் (பாகம்:01).... | 15 |
| தமிழர் தாயகத்தில்... | 18 |
| பேரவையில்.... | 21 |
| வரலாறு காணாத... | 23 |
| பீனிக்ஸ்... | 25 |
| தியாகி திருமலை... | 26 |
| யாழில் கட்டப்ப.... | 28 |
| வன்னி போர்க்கள... | 29 |
| தாயின் கண்ணீர் (கவிதை)... | 31 |
| யாழ்ப்பாணம் ஆர். முத்தையா.... | 32 |
| படிப்பினை... | 33 |
| கணனி சார்ந்த... | 34 |
| மனதைத் தொட்ட... | 35 |
| வலை (தொடர் கதை)... | 37 |
| கரிநாள் (கவிதை)... | 40 |
| தமிழின் சிறப்பு... | 41 |
















# திருக்குறள்

**குறள் 965:**

"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்"

**விளக்க உரை:**

மலை போல் உயர்ந்த நிலையில் உள்ளவரும், தாழ்வுக்கு காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழ்ந்து போய் விடுவர்.

மணம் 32 இல் அட்டைப்படம் வித்தியாசமானதாகவும் சிறப்பாகவும் இருந்தது. 'கர்மா' கவிதை அருமை. உண்மையை அப்பட்டமாக சொல்லியிருக்கிறார் கவிஞர்.

தமிழரசுக் கட்சியைப் பற்றிய விடயங்கள் சரிதான். ஆனாலும் மாற்றம் வரும் என்று எனக்கு எண்ணத் தோன்றவில்லை. தலைமை மாற வேண்டும் என்று நினைத்தாலும் மற்றவர்கள் கும்மியடித்து குழப்பி விடுவார்களே பார்ப்போம்.

**-சபேசன் செல்லத்துரை.**
**பேர்மிங்காம், லண்டன்.**

இம்முறை கட்டுரைகளை அளவாகப் போட்டு அசத்தி விட்டீர்கள். இம்முறை பாரியின் கட்டுரையைக் காணவில்லை என்ற ஒரு குறைதான்.

ஹைக்கூ கவிதைகள் வித்தியாசமானதாகவும் நன்றாகவும் இருந்தன. இதையே தொடரலாமே நிகழ்நிலை காப்புச் சட்டம் என்ற பெயரில் எம்மவர்களை வேறு வழியில் துன்புறுத்தப் போகிறார்கள் என்று அச்சமாக உள்ளது. இது தொடர்பான பூரண தகவல்களையும் தயவு செய்து எழுதுங்கள்.

**-குமுதா ஈஸ்வரன்**
**நெதர்லாந்து.**

மாலினியின் 'சாதனைப் பெண்ணே' கவிதை நன்று. தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் பற்றிய தகவல்கள் நிச்சயமாக எழுதப்பட வேண்டிய ஒரு பதிவு.

சிங்களப் பிரதேசத்தில் என்ன நடக்கிறது என்ற புள்ளிவிபரங்கள் தருவதை தயவுசெய்து குறைத்துக் கொள்ளுங்கள்.

எமது நிலம் பற்றி, எம்மவர்களைப் பாதிப்பவை பற்றி, எது பிரதேசத்தில் நடக்கும் வேலைத்திட்டங்கள் பற்றி எழுதுங்கள்.

**-வாசுதேவன் நாராயணமூர்த்தி**
**பரிஸ், பிரான்ஸ்**




சுபாஷ் சந்திரபோஸ் பற்றிய கட்டுரையில் தேசியத் தலைவரை உள்ளடக்கி எழுதியது அருமை. தலைவருக்கு பிடித்தமான ஒரு தலைவர் சுபாஷ் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். எமக்காக குரல் கொடுக்கும் கனடா பற்றிய கட்டுரை நன்று. ஐங்கரனின் கட்டுரைகள் வழமைபோலவே இம்முறையும் அருமை.

**-சுந்தரேசன் சிவஞானம்**
**சிட்னி, அவுஸ்திரேலியா.**




தேனீ பற்றிய, தாய் பற்றிய பதிவுகள் அருமை. ஹைக்கூ கவிதைகள் அருமையாக வந்திருந்தன. தமிழாராய்ச்சி மாநாட்டு கட்டுரை மனதை தொட்டது.

இப்படி எத்தனை துயர நிகழ்வுகள் எங்கள் வாழ்வில் எழுதிக்கொண்டே போகலாம்

**-ஷரிகா நிஷான்**
**லாஸ் ஏஞ்சல்ஸ், அமெரிக்கா.**

மாட்டுவண்டி சவாரியை என்னுடைய இள வயதில் பார்த்தது. இந்த வயதிலும் ஊருக்குப் போக என்னுடைய மனம் ஏங்குகிறது.

ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும், அவற்றின் சிறப்புகளைப் பற்றியும் எழுதலாமே. என்னைப் போன்ற பலருக்கு சந்தோசமாக இருக்கும். புலம் பெயர் தேசங்களில் உள்ள அடுத்த தலைமுறையினருக்கு தாயகம் பற்றிய அறிவு மிகவும் குறைவு. அவர்களின் உணர்வுகளைத் தூண்டி உற்சாகம் கொடுப்பதுபோல் எழுதுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

**-புவனேஸ்வரி சண்முகம்.**
**ரொரன்ரோ, கனடா.**

'வலை' நெடுங்கதை அருமையாகப் போகிறது. பாராட்டுகள்.

குட்டிக் குட்டிக் கதைகளும் அருமை. இன்னும் நிறைய கதைகள் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

எங்கள் மக்களின் அவலங்களை என்னென்ன வடிவில் எல்லாம் வெளிக்கொணர முடியுமோ அத்தனையையும் செய்யுங்கள்.. ப்ளீஸ்.

**-வேணி சாந்தன்.**
**வளசரவாக்கம், இந்தியா.**

மலரன்னையின் புத்தகங்கள் சிலதை நானும் படித்திருக்கிறேன். அவருக்கு விழா வைத்தது சிறப்பு. 'மனிதம்' கவிதை யதார்த்தத்தை அழகாகச் சொல்லியிருக்கிறது. அத்திமரம் நடுவதால் இவ்வளவு பலன்களா? எம் ஜி ஆரின் பிறந்தநாளில் போட்ட பதிவும் நல்லதுதான்.

**-ஆரணி சுகேசன்**
**பேர்ளின், ஜேர்மனி.**



## ஆசிரியர் பக்கம்

# தோற்றுப் போனது ஒரு பாசப் போராட்டம்

ஈழ வரலாற்றில் ஒரு துயர்படிந்த நாளாக, கறைபடிந்த நாளாக இன்றைய நாள் (28/02/2024) பதிவு பண்ணப்பட்டிருக்கிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்டு, இந்திய சிறைச்சாலையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கொடுமையான சிறைத்தண்டனை அனுபவித்து வந்த சாந்தனின் உயிர் இன்று பறிபோயிருக்கிறது. மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் இன்று 28/02/2024 மாரடைப்பினால் காலமானதாக இந்திய செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. காலமானபோது அவருக்கு வயது 54.

பேரறிவாளன், முருகன், நளினி, றொபேட் பயஸ், ஜெயக்குமார் உள்ளிட்ட தண்டனைக் கைதிகளுடன் சாந்தன் எனப்படும் சின்ன சாந்தனுக்கும் சேர்த்து முதலில் மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அது பல்வேறு போராட்டங்களின் பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டிருத்தது. ஒரு மனிதனுக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை பதினான்கு வருடங்கள் என்பார்கள். அதையும் தாண்டி முப்பது வருடங்களுக்கு மேலாக தண்டனையை அனுபவித்த சாந்தன் 11/112022 இல் விடுதலை செய்யப்பட்டிருந்தார். ஈழத்தைச் சேர்ந்த, விடுவிக்கப்பட்ட தண்டனைக் கைதிகள் அனைவரும் விடுதலை என்ற பெயரில் மறுபடியும் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப் பட்டிருந்தனர்.

34 வருடங்களாக பார்க்காத தனது தாயை ஒருமுறையேனும் பார்த்து விடவேண்டும் என்பதே அவரது ஒரே விருப்பாக இருந்தது. பிரயாணம் செய்ய முடியாதிருந்த தாயைப் பார்க்க தாயகம் வருவதற்காக அவர் மனிதாபிமான கோரிக்கை வைத்திருந்தார். அவர் கொடுக்காத மனுக்களில்லை. அவருக்காக பலர் போராட்டம் நடத்தினர், சட்டபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தாயகத்தில் இருந்த தாயாரும் தம்பியாரும் சாந்தனை தாயகத்திற்கு கொண்டு வருவதற்காக அங்கு பல போராட்டங்களை நடத்தினர். மனுக்களை கொடுத்தனர். மனிதாபிமான ரீதியில் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்காது இலங்கை, இந்திய அரசுகள் இழுத்தடித்தன. இலங்கை சரியான ஆவணங்களை இந்திய மத்திய அரசிடம் கொடுக்க தவறியதால் பிரயாணம் தடைப்படுகிறது என்றார்கள். பின்னர், தாம் ஆவணங்களை வழங்கி விட்டதாகவும், தமிழ்நாட்டு முதலமைச்சருக்கும் இதுபற்றி அறிவித்து விட்டதாகவும் இலங்கையின் தரப்பில் அலி சப்ரி அறிக்கை விட்டார். இருந்தும் மத்திய, மாநில அரசுகள் ஏதேதோ காரணங்கள் கூறி காலத்தை இழுத்தடித்தன. இடையில், கடந்த ஜனவரியில் கல்லீரல் பாதிப்புக்குஉள்ளான சாந்தன் திருச்சி அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த சாந்தன் ஒரு கட்டத்தில் கோமாவிற்குப் போய் மீண்டார். இறுதியில் பயண ஆவணங்கள் அனைத்தும் கிடைத்தன. 28/02/24 அன்றிரவு தாயகம் திரும்புவதற்கான முழு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த நிலையில், அதேதினம் அதிகாலையில் மாரடைப்பினால் சாந்தனின் உயிர் பிரிந்ததாக அறிவிக்கப்பட்டிருப்பது துயரமான ஒரு நிகழ்வு.

தனது தாயை நேரில் சந்தித்து ஒரு ஐந்து நிமிடங்களாவது பேசியபின் அவரது உயிர் பிரிந்திருந்தாலாவது அந்தத் தாயின் மனம் ஆறியிருக்கும். சாந்தன் மருத்துவமனையில் இருந்தபோது அவரது தம்பியை சந்திக்க முடிந்தது. தாயையும் தாய் நாட்டையும் சந்திக்க அவர் ஏங்கியதை அந்த சந்திப்பில் காண முடிந்தது. திருச்சி சிறப்புமுகாமில் அவர் இருந்தபோது தாயகம் வருவதற்காக அவரின் தாய் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

எமது கேள்வியெல்லாம்.. அந்த நேரத்தில் எமது தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஏன் ஒரு தாயின் கருணை மனுக்களிற்கு அவர்களால் பதிலளிக்க முடியவில்லை? சாந்தன் தாயகம் திரும்புவதில் தமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று இலங்கை அரசாங்கமே தெரிவித்த பின்னர் அங்கு எந்தவித சட்டச் சிக்கலும் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இதனால், இலங்கையையும் இந்தியாவையும் திருப்திப்படுத்த நினைக்கும் எமது தமிழ் அரசியல்வாதிகளுக்கு எந்தப் பிரச்சனை வரவும் வாய்ப்பில்லை. இந்த நிலையில் சாந்தனை தாயகம் கொண்டு வருவதற்கான நெருக்கடியை அரசுக்குக் கொடுக்காமல் ஏன் தாமதித்தார்கள்? அப்படி என்ன உரிமையை தமிழ் மக்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்காக போராடிக் கொண்டிருந்தார்கள்?

சாந்தனின் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டதன் பின்னர்தான் ஓரிரு தமிழ் அரசியல்வாதிகள் சனாதிபதிக்கு கடிதம் எழுதியதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன. காலம் கடந்த நடவடிக்கையினால் என்ன பயன்?

இதுபோல எந்தனையோ சாந்தன்கள் இன்னமும் இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ தாய்மார்கள், குடும்ப உறுப்பினர்கள் தமது உறவுகளைச் சந்திக்க துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் போராட்டங்கள் நடத்துகிறார்கள் மனுக்கள் கொடுக்கிறார்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையும் கண்ணீருடன் நிம்மதியின்றி கழிகிறது - சாந்தனின் தாயைப்போல. இங்கு எத்தனையோ பெற்றவர்கள் தமது பிள்ளைகளை ஒரு தடவையேனும் காணாமலே உயிரை விட்டுவிட்டார்கள்.

எமது அரசியல்வாதிகளின் அக்கறையற்ற போக்கும் இவற்றிற்கு ஒரு காரணம். இவற்றிற்கு எமது தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்பு நிற்க வேண்டும். பதவிக்காகவும் சுயலாபத்திற்காகவும் தமக்குள் மோதுவதைத் தவிர்த்து என்று மக்களின் நலனை மட்டும் கருத்தில் எடுக்கிறார்களோ அன்றுதான் தமிழ் அரசியற் கட்சிகளால் தமிழர்களுக்கு நல்லது நடக்கும்.



பாரி

# குறிவைக்கப்படுகிறதா தமிழர் வளங்கள்?

இந்த மாத முற்பகுதியில் யாழ் முற்றவெளியில் இசை நிகழ்ச்சி என்ற பெயரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த குத்தாட்ட நிகழ்ச்சியொன்று இடைநடுவில் குழம்பிப் போயுள்ளது. கனடா வாழ் யாழ்ப்பாணத்தவர் ஒருவர் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தார்.

தென்னிந்திய கலைஞர்கள் என்று பலரை அவர் அழைத்து வந்திருந்த போது, அவர்களுக்கு இங்கு வர விருப்பமே இல்லாமல் இருந்ததாகவும், தான் இறைஞ்சிக் கூப்பிட்டதன் பின்னரே அவர்கள் வர ஒப்புக் கொண்டதாகவும் கூறியிருந்தார். இவை எவற்றையும் கருத்திலும் எடுக்காத எம்மவர்கள் சிலர் மாலைகளும் கையுமாக விமான நிலைய வாசலில் காத்துக் கிடந்து அவர்களை அழைத்து வந்து ஒரு கோலாகல வரவேற்புக் கொடுத்தனர்.



ஆரவாரமாக ஒழுங்கு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சி முதலில் இலவசம் என்று பேசப்பட்டது. பின்னர் 25 ஆயிரம், 7 ஆயிரம், 3 ஆயிரம் என அனுமதிச் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இது போதாதென்று குத்தாட்டம் போட வந்திருந்த நடிகை ஒருவருடன் புகைப்படம் எடுக்க ஒருவருக்கு முப்பதினாயிரம் ரூபா வீதம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தவர் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்வி நிறுவனம் ஒன்றைத் தொடங்கவிருப்பவர். சேகரிக்கப்படும் இந்த மேலதிக பணம் கல்வி அறக்கட்டளைக்கே போகும் என்று அவர் தெரிவித்திருந்தாலும், ஒரு கல்வி நிறுவனத்துக்கும், இசை நிகழ்ச்சிக்கும் அரைகுறை ஆடையணிந்து மேடையேறி குத்தாட்டம் போடும் நடிகையருக்கும் என்ன சம்பந்தம்?

இந்த இசை நிகழ்ச்சி இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் பின் யாழ்ப்பாணவாசிகள் காட்டுமிராண்டிகள் என்று சில ஊடகங்கள் முத்திரை குத்தியுள்ளன. வந்தாரை வரவேற்று உபசரிக்கவில்லை, அநாகரிகமாக நடந்துகொண்டார்கள், கண்டிக்கத்தக்கது என்று பக்கம்பக்கமாக எழுதியவர் பலர். நிகழ்ச்சியை நடத்த வந்தவர்களும் அதை ஒழுங்கு செய்தவரும் எதிர்பார்த்ததுக்கும் அதிகமாகவே பணத்தை சேகரித்து சென்றுவிட்டனர்.

பின்னர், வருமானம் வரும் பாதை அடைத்துக்கொள்ளக் கூடாது என்று சுதாகரித்துக் கொண்ட தென்னிந்தியக் கலைஞர்கள் 'யாழ் மக்கள் எம்மை அன்பால் திணறடித்து விட்டனர்' என்று அடுத்த முறையும் கூடாரம் போட தாம் தயாராக இருப்பதை நாசூக்காக தெரிவித்து விட்டனர். அனுமதிச்சீட்டுக்கு பணம் கட்டியும் நிகழ்ச்சியை பார்க்க முடியாமல் ஏமாந்து நின்றவர்கள் எம்மவர்கள். அவர்கள் பற்றி யாரும் சிந்திக்கவில்லை. ஆழ நோக்கினால் இதன் பின்னால் ஒரு பெரிய அரசியல் இருப்பதை புரிந்து கொள்ள முடியும்.



நீண்டகாலமாக குண்டுவீச்சுகள், ஷெல்லடிகள், பொருளாதார நெருக்கடிகள் என்று நலிவடைந்திருந்த ஒரு இனம் தனக்கான கொண்டாட்டங்களை தேர்ந்தெடுக்க முடியாதா என்று கேட்டால் முடியும். ஆனால் அந்தக் கொண்டாட்டங்கள் எங்கள் சமூக விழுமியங்களுக்கு ஏற்ற வகையிலும், எல்லாத் தரப்பு மக்களையும் மகிழ்விக்கும் வகையிலும் இருக்கக்கூடிய தகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

அவை இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் வகையிலான விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், திருவிழாக்கள், ஒன்று கூடல்கள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் என்று எதுவாகவேனும் இருக்கலாம். இவ்வாறுதான் நாங்கள் எங்கள் விழுமியங்களைத் தொலைக்காது இதுவரைகாலமும் வாழ்ந்தோம். சமூக விழுமியங்களுக்கு அடங்காத எந்தக் கொண்டாட்டமும் ஒரு சமூகத்தின் நலனுக்கு ஏற்புடையது அல்ல.

அண்மைக்காலமாக, ஈழத்தமிழ் மக்கள்மீது அதீதகரிசனைகொண்டு, அவர்களை மகிழ்விப்பதற்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் பல வெளித்தரப்பினர் ஆர்வம் காட்டுகிறார்கள். இதற்குப் பின்னால் உள்ள அரசியல் எமக்குப் புரியாததல்ல.

ஈழத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண முடியாத நிலையில்தான் இங்கு ஆயுதப் போராட்டம் உருவெடுத்தது யாவரும் அறிந்ததே. இந்தப் போராட்டங்களில் பல்லாயிரக்கணக்காண இளைஞர்கள் யுவதிகள் தம்மை ஆகுதியாக்கியுள்ளனர். இலட்சக்கணக்கான மக்கள் உயிர் துறந்துள்ளனர். பல கோடி பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. வீடு வாசல் துறந்து, சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்த மக்களில் பலர் இன்னமும் தமது இடங்களுக்கு திரும்பிப் போக முடியாமல் தவிக்கிறார்கள். 2009 இல் ஆயுதப் போராட்டம் முடிவடைந்து விட்டதாக இலங்கை அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவித்து விட்டது.

போர்தான் முடிவடைந்தது. எங்கள் போராட்ட உணர்வு அப்படியேதான் இருக்கிறது இருக்கும். இந்த உணர்வு இருக்கும் வரை தமிழர் பிரச்சனை தொடரும் என்பது இலங்கை, இந்திய அரசுகளுக்குத் தெரியும். இந்தப் போராட்ட உணர்வை மழுங்கடிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறார்கள் அவர்கள். தென்னிந்தியாவில் உள்ள அத்தனை கட்சிகளும் ஈழத்தமிழர் பிரச்சனை பற்றி பேசி தமது கட்சிகளுக்கு ஆதரவைப் பெருக்கிக் கொள்கிறார்கள். மாவீரர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்.

எங்கள் பிரச்சனைகள், எங்கள் உணர்வுகள் என்பனவற்றை வைத்து வீரவசனங்கள் மிக்க படங்களைத்தயாரித்து பணமாக்கிக்கொள்கின்றனர். அறிக்கைகள் விட்டு தத்தமது கட்சியை வலுப்படுத்துகின்றனர். மொத்தத்தில் எங்களின் உணர்வுகள் வியாபாரமாக்கப் படுகின்றன. ‘சுப்பர் சிங்கர்’ போன்ற நிகழ்வுகளின் இறுதிக் கட்டத்தில் ‘விடைகொடு எங்கள் நாடே’ என்ற பாடல்கள் பாடவைக்கப்பட்டு எல்லோரும் கண்ணீர் சிந்தி எங்களுக்காக வருந்துகின்றனர்.

இப்படியான இசை நிகழ்ச்சிகள் மூலம் உலகெங்கும் சிதறிக் கிடக்கும் தமிழ் மக்களைக் கவர்ந்து, மேலும் மேலும் பணம் சேர்ப்பதற்காக ஈழத்திலிருந்து போனவர்கள் போட்டிகளில் தெரிவாகிய நிகழ்வுகளும் உண்டு. வருடாவருடம் இப்படியான உணர்வுபூர்வமான பாடல்களைக் கேட்பதும், இப்போதுதான் புதிதாகக் கேட்பது போல கண்ணீர் சிந்துவதும் ஒன்றும் புதிதல்ல. இவர்களில் எத்தனை பேர் இந்திய அகதி முகாம்களில் வாடும் ஈழத்தமிழர்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள்? கடல் கடந்து எம்மை மகிழ்விக்க வரும் இவர்கள் ஒரு தடவையாவது அங்கு அகதி முகாம்களில் வாடும் எம் மவர்களை மகிழ்வித்திருக்கிறார்களா?

இப்போது இவர்களின் குறியெல்லாம் புலம்பெயர் தேசங்களிலிருந்து தாயகத்திற்கு வரும் அபரிமிதமான பணத்தை சுரண்டுவதுதான் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. தென்னிந்தியாவிலிருந்து வேறுநாடுகளுக்கு இசை நிகழ்ச்சிக்காக போவதென்றால் அதற்கான தயார்ப்படுத்தலுக்கு பணமும் நாட்களும் விரயமாகும். பக்கத்தில் இருக்கும் ஈழத்துக்கு வந்தால் ஒரேநாளில் எதிர்பார்ப்பதற்கும் மேலே பணம் சேர்ந்துவிடும். இது அவர்களுக்கு வியாபாரம். அதற்காக எங்கள் வாழ்வில் விளையாட நாம் அனுமதிக்க முடியுமா?

போர், உயிரிழப்புகள், இடப்பெயர்வு,

> **எமது போராட்ட உணர்வைச் சிதைப்பதற்காக எதிரி பல்வேறு உத்திகளைக் கையாள்கிறான். சமூகச் சீரழிவுகளைப் புகுத்துகிறான், போதைவஸ்தை பரப்பி விட்டான், ஊடுருவலாளர்கள் மூலம் கருத்துச் சிதைவை திட்டமிட்டுச் செய்கிறான். எமது நிலம் பறிபோகிறது. கல்வியின் தரம் கேள்விக்குறியாகி விட்டது. அரசாங்க அடிவருடிகள் தமது சுயலாபத்திற்காக எமது அடிப்படை உரிமைகளை அழிக்க துணை போகிறார்கள். இப்போது எமது பணம் குறிவைக்கப் படுகிறது.**



பட்டினி என்று இருந்தபோதும் கண்ணியம் தவறாது சமூக உணர்வுடன் நடந்தவர்கள் நாங்கள். போர் முடிவிற்கு வந்தபின், எதிரியால் எமது தாயகப் பரப்பில் திட்டமிட்டு புகுத்தப்பட்ட போதைவஸ்து பாவனை இன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. எமது இளைஞர்கள், யுவதிகள் போதைவஸ்தின் பிடியில் அகப்பட்டு சீரழிந்து வருகிறார்கள்.

இப்போது சமூகத்தில் கட்டுப்பாடற்ற தன்மை உருவெடுத்துள்ளது. வாள் வெட்டுகள், கொலைகள், கொள்ளைகள், பாலியல் பலாத்காரங்கள் கட்டுமீறிப் போய்விட்டன. அழகிப் போட்டிகள் நடக்கின்றன. 'பிக் பொஸ்' இல் கலந்து கொண்டு பின்னர் திரைப்படங்களில் நடித்த ஒரிருவரால் நாமும் கலந்து கொள்ளலாம் என்ற எண்ணப்பாங்கு உருவாகிவிட்டது. இந்தியாவில் இருந்து இந்துத்வாவும் சமஸ்கிருதமும் இங்கு திணிக்கப்படுகின்றன.

போர்ச்சூழலில் முன்பின் தெரியாதவர்கூட ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையாக இருந்த காலம் போய்,

> **அண்மைக் காலமாக, ஈழத்தமிழ் மக்கள் மீது அதீத கரிசனை கொண்டு, அவர்களை மகிழ்விப்பதற்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் பல வெளித் தரப்பினர் ஆர்வம் காட்டுகிறார்கள். இதற்குப் பின்னால் உள்ள அரசியல் எமக்குப் புரியாததல்ல.**

இப்போது யாரையுமே நம்ப முடியாத இடத்தில் இருக்கிறோம் நாம்.

இந்த நிலையில் இன்று நாம் தவிப்பதற்கு எதிரிகளை மட்டும் காரணமாக்க முடியாது. நாமும் ஒரு காரணம்தான். முன்பு நாம் கஷ்டப்பட்டு உழைத்து குடும்ப பாரத்தைச் சுமந்தபோது, குடும்பத்தின் அத்தனை உறுப்பினர்களும் ஏதோவொரு வகையில் ஒத்துழைத்தார்கள். ஒரு இளைஞனோ யுவதியோ எதுவும் செய்யாமல் சும்மா இருந்தது கிடையாது. இப்போது வீட்டுக்கு வீடு புலம்பெயர் தேசத்து பணம் வந்து குவிகிறது. உடலுழைப்பு குறைந்து விட்டது. பணம் பெருகி விட்டது.

வேலைவாய்ப்பு அரிதாக இருக்கும் நிலையில் எமது இளையவர்கள் வீணே காலத்தைக் கழிக்கின்றனர். பிரயோசனமான முறையிலான திட்டமிடுதல்களோ, அவர்களுக்கான முறையான வழிநடத்தல்களோ கிடைக்கப் பெறுவதில்லை. கட்டற்ற நவீனரக மோட்டார் சைக்கிள் பாவனையால் எத்தனையோ இளைஞர்கள் விபத்துகளில் மடிந்து போவதை பார்க்க முடிகிறது.


ஒவ்வொரு மாதமும் கோடிக்கணக்கான பணம் புலம்பெயர் தேசங்களிலிருந்து தாயகத்திற்கு வருகிறது. ஆயினும், சொல்லத்தக்கவாறு நிறுவனங்களோ, ஆலைகளோ ஆரம்பிக்கப் படவில்லை. சுயதொழிலில் ஈடுபடுபவர்களும் மிகக் குறைந்தளவிலேயே உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு ஒரு சரியான அரசியல் தலைமை இல்லாதிருப்பதும் தெரிவு செய்யக்கூடிய வகையில் தமிழ் அரசியற் கட்சிகள் இயங்காதிருப்பதும் எமக்கு ஒரு சாபக்கேடு. ஒரு சரியான சிவில் சமூகம் எம்மிடம் இல்லை. அதற்கான முயற்சிகளும் இல்லை அல்லது சிவில் சமூகத்தை அமைக்கும் முயற்சிகள் கைகூட முடியாமல் இடைநடுவில் தடைப்பட்டு நின்றுவிடுகின்றன. இதற்கான முயற்சிகளை நாங்கள்தான் எடுக்க வேண்டும்.

எமது போராட்ட உணர்வைச் சிதைப்பதற்காக எதிரி பல்வேறு உத்திகளைக் கையாள்கிறான். சமூகச் சீரழிவுகளைப் புகுத்துகிறான், போதைவஸ்தை பரப்பி விட்டான், ஊடுருவலாளர்கள் மூலம் கருத்துச்சிதைவை திட்டமிட்டுச் செய்கிறான். எமது நிலம் பறிபோகிறது. கல்வியின் தரம் கேள்விக்குறியாகி விட்டது. அரசாங்க அடிவருடிகள் தமது சுயலாபத்திற்காக எமது அடிப்படை உரிமைகளை அழிக்க துணைபோகிறார்கள். இப்போது எமது பணம் குறிவைக்கப் படுகிறது.

எம்மைச் சூழ நடக்கும் நிகழ்வுகளை ஆழ நோக்கி, நாம் சுதாகரித்துக் கொள்ள வேண்டும். இதன்மூலம் திட்டமிட்ட ஊடுருவல்களையும் எமக்கு ஏற்படும் இழப்புக்களையும் கணிசமானளவு குறைத்துக்கொள்ள முடிவதுடன் எம்மைத் தற்காத்துக் கொள்ளவும் முடியும்.







# அனுரவின் இந்தியப் பயணம்

இந்தியாவுக்கான அனுரகுமார திஸாநாயக்க மற்றும் ஜேவிபி/என்பிபி தலைமைத்துவக் குழுவின் உத்தியோகபூர்வ விஜயம், இந்திய-இலங்கை உறவுகள் மீதான கட்சியின் வரலாற்றுரீதியான நிலைப்பாட்டிலிருந்து குறிப்பிடத்தக்க அளவிலான விலகலைக் குறிக்கிறது.

அறுபதுகளில் வேரூன்றிய இந்திய-விரோத சொல்லாடல்களுடன் தோற்றுவிக்கப்பட்ட ஜே.வி.பி.யானது இந்தியாவின்அண்மைக்கால அழைப்பை ஏற்றுக்கொள்வதானது ஒரு நடைமுறைரீதியான மாற்றத்தை பரிந்துரைக்கிறது. இது இலங்கையின் அடுத்த அரசாங்கத்தின் அதிகாரத்தை பொறுப்பேற்றால் இந்தியாவுடன் ஈடுபடுவதற்கான அதன் தயார்நிலையை சமிக்ஞை செய்கிறது.

ரணில்-ராஜபக்ச ஆட்சி மீதான பரவலான விரக்திக்கு மத்தியில், இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் மாற்று



அரசியல் சக்திகளுக்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

அடிப்படைத் தேவைகள் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கையை இழந்த சாதாரண மக்கள் மத்தியில் உள்ள அதிருப்தியை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் ஜே.வி.பி., அந்த உணர்வைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் இருந்து போட்டியை எதிர்கொள்ளும் அதேவேளையில், விளிம்புநிலை மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவைப் பெற்றுள்ள நிலையில், ஜே.வி.பி.யின் வளர்ச்சியடைந்து வரும் அரசியலும் மூலோபாய மறுசீரமைப்பும் அதனை ஒரு வலிமைமிக்க போட்டியாளராக ஆக்குகின்றன.

அண்மைக் காலங்களில், ஜே.வி.பி. தனது அரசியல் நோக்கங்களில் கணிசமான மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. சோசலிசத்தை ஆதரிப்பதில் இருந்து தனது கவனத்தை மாற்றிய கட்சி, இப்போது ஊழலை ஒழிப்பதற்கும் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் முன்னுரிமை அளிக்கிறது. ஒவ்வொரு பொது உரையிலும், ஜே.வி.பி/என்.பி.பி தலைவர், ஊழல் மற்றும் பொதுச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தியமைக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக் கூற வைப்பதாகசூளுரைக்கிறார்.

உலகளவில் ஏழ்மையான மற்றும் ஊழல் நிறைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கைக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான நிலைக்கு பங்களிக்கும் காரணிகள் இவையாகும் .

ஜே.வி.பி.யின் கோபம் மற்றும் எதிர்ப்பின் வெளிப்



படையான காட்சி, குறிப்பாக அரகலய போராட்டத்திற்குப் பிந்தைய சூழலில்,வாக்காளர்களிடம் நன்கு எதிரொலித்ததுடன், அதன் வாக்காளர் தளத்தை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது. நாடு முழுவதும் நடைபெறும் பேரணிகளில் ஏராளமான ஆண்களும் பெண்களும் கலந்துகொள்வது கட்சியின் வளர்ந்து வரும் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது.

ஜே.வி.பி.யின் தனித்துவமான நிறுவன மாதிரி மற்றும் அரசியல் கூட்டணிகளுக்குள் அதன் பங்கு இலங்கை அரசியலில் ஒரு முக்கிய பங்காளியாக அதன் நிலையை உறுதிப்படுத்தியுள்ளது. கூடுதலாக, கட்சியின் பயனுள்ள சமூக ஊடகப் பிரசாரம் இளைய தலைமுறையினரிடையே பிரபலத்தைப் பெற்றுள்ளது. எவ்வாறாயினும், ஜே.வி.பி.யின் ஜனரஞ்சக எழுச்சியானது, உள்ளூர் மற்றும் வெளிச் சூழல்களில் ஜனநாயக நடைமுறை வாதத்தைத் தழுவுவதற்குத் தயாராக இருப்பதைக் காட்டாதவரை, நாட்டின் நீடித்த சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போகலாம்.

இந்தியாவின் அழைப்பு, இந்திய-அமெரிக்க உறவுகளால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு சக்தியை நோக்கிய ஜே.வி.பி.யின் புலனுணர்வுக்கு ஒரு சோதனையாகத் தோன்றுகிறது. குறிப்பிடத்தக்க வகையில், இந்தியாவுடனான கலந்துரையாடல்கள் இந்த சக்திகள் தொடர்பாக கட்சியின் கொள்கையை மறுபரிசீலனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன, அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் இந்திய-விரோத சொல்லாடலுக்கு சவால் விடுகின்றன.

“இந்தியாவின் அழைப்பு, இந்திய-அமெரிக்க உறவுகளால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு சக்தியை நோக்கிய ஜே.வி.பி.யின் புலனுணர்வுக்கு ஒரு சோதனையாகத் தோன்றுகிறது. குறிப்பிடத்தக்க வகையில், இந்தியாவுடனான கலந்துரையாடல்கள் இந்த சக்திகள் தொடர்பாக கட்சியின் கொள்கையை மறுபரிசீலனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன, அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் இந்திய-விரோத சொல்லாடலுக்கு சவால் விடுகின்றன.”

இது பாரம்பரியமாக பல்கலைக்கழக கூட்டங்கள் மற்றும் இடது-தேசியவாத பிரிவுகளின் ஆதரவைப் பெற்றதாகும். இந்தபிரிவுகள், பெரும்பாலும் முழுநேர செயற்பாட்டாளர்களாவர். வரலாற்று ரீதியாக இலங்கையை துன்புறுத்தும் முதலாளித்துவம் மற்றும் மேலாதிக்க அரசியலாக அவர்கள் உணர்ந்தவற்றிலிருந்து காப்பாற்ற முயன்றனர்.

ஜே.வி.பி.யின் வேர்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியுடனான அதன் ஆரம்பகால தொடர்புகளில் இருந்து, ஒரு தனித்துவமான அரசியல் பயணத்தை வடிவமைக்கின்றன. மார்க்சிஸ்ட்-லெனினிசத்துடன் இணைந்தது மற்றும் போல்ஷிவிக் மற்றும் லெனினிச நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது, 1971 இல் பாரம்பரிய மற்றும் இடது-வலது அரசியல் உயரடுக்குகளுக்கு எதிரான கிளர்ச்சியாக கட்சி வெளிப்பட்டது. 1989 இல் தேசியவாதத்தில் கவனம் செலுத்தியதன் மூலம், திராவிடப் பிரச்சினை மற்றும் இந்தியத் தலையீடு ஆகியவற்றை அணிதிரட்டல் புள்ளிகளாகப் பயன்படுத்தி, சிங்கள மக்களிடையே இந்திய-எதிர்ப்பு உணர்வுகள் எழுவதற்கு பங்களித்தது.

1994 க்குப் பிறகு ஜே.வி.பி.யின் மீள் எழுச்சியானது சந்திரிகா பண்டாரநாயக்கவுடன் மூலோபாய ஒத்துழைப்பைக் கண்டது. அது அரசாங்கத்திற்குள் குறிப்பிடத்தக்க செல்வாக்கை வழங்கியது. பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டிருந்த போதிலும், குறிப்பாக தமிழர் பிரச்சினை மற்றும் இந்தியா தொடர்பாக கட்சி தனது கருத்தியல் நிலைப்பாட்டை கடைப் பிடித்தது. எவ்வாறாயினும், 2004 இல் விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்கப்பட்ட சுனாமிக்குப் பிந்தைய நடவடிக்கை பொறிமுறைக்கு (பி ரொ ம் ) அதன் எதிர்ப்பின் பின்னர் அரசாங்க



> மகிந்த ராஜபக்சவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான ஜனாதிபதித் தேர்தல் உட்பட முக்கிய அதிகார மாற்றங்களில் ஜே.வி.பி.யின் ஈடுபாடு, அரசியல் விளைவுகளில் செல்வாக்கு செலுத்துவதற்கான அதன் திறனை வெளிப்படுத்தியது. கட்சியானது அரசியலமைப்பு சீர்திருத்தங்களை தீவிரமாக பின்பற்றியது, நிறைவேற்று ஜனாதிபதி முறையின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்று வாதிட்டது. சமீபத்திய தலைமை மாற்றங்கள், அதன் நிலைப்பாட்டில் மாற்றங்களுக்கு வழிவகுத்தன.




அதிகாரத்தில் இருந்து ஜே.வி.பி.யின் விலகல் தொடங்கியது.

மகிந்த ராஜபக்சவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான ஜனாதிபதித் தேர்தல் உட்பட முக்கிய அதிகார மாற்றங்களில் ஜே.வி.பி.யின் ஈடுபாடு, அரசியல் விளைவுகளில் செல்வாக்கு செலுத்துவதற்கான அதன் திறனை வெளிப்படுத்தியது. கட்சியானது அரசியலமைப்பு சீர்திருத்தங்களை தீவிரமாக பின்பற்றியது, நிறைவேற்று ஜனாதிபதி முறையின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்று வாதிட்டது. சமீபத்திய தலைமை மாற்றங்கள், அதன் நிலைப்பாட்டில் மாற்றங்களுக்கு வழிவகுத்தன.

ஜே.வி.பி.யின் வரலாற்று ரீதியான சித்தாந்தத்தின் மையமானது, இலங்கையின் இறைமையில் இந்தியாவின் செல்வாக்கு பற்றிய கவலையில் வேரூன்றிய அதன் இந்திய-விரோத அணுகுமுறை ஆகும். சுதந்திரத்தை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில், இலங்கை விவகாரங்களில் இந்தியாவின் தலையீட்டை கட்சி தொடர்ந்து விமர்சித்து வருகிறது. 1987 இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையிலிருந்து ஜே.வி.பி.யின் வெளியுறவுக் கொள்கை விவாதங்களில் இந்த இந்திய-விரோத நிலைப்பாடு ஒரு நிலையான இழையாக இருந்து வருகிறது.

ஜே.வி.பி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் நிலையில், அதன் வரலாற்றுப் பயணத்தின் சிக்கல்களும், முக்கியமான பிரச்சினைகளில் நுணுக்கமான நிலைப்பாட்டின் அவசியமும் இலங்கை அரசியலின் சிக்கலான பரப்பை கோடிட்டுக் காட்டுகிறது. ஊழலை ஒழிப்பதற்கும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் அதன் உறுதிப்பாட்டை நிலைநிறுத்திக் கொண்டு இந்தியாவுடன் ஈடுபடும் கட்சியின் விருப்பம், இந்திய எதிர்ப்பு என்ற அதன் முந்தைய இலட்சியவாதத்திலிருந்து மிகவும் சாதாரணமான நடைமுறைவாதத்திற்கு ஒரு விலகலைக் குறிக்கிறது.

மேலும், அரசியல் கணிப்புகள் ஏராளமாக இருக்கலாம், ஆனால் உண்மையான சவாலானது அதிகாரத்தை ஒருங்கிணைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல், குறிப்பாக பிராந்திய புவிசார் அரசியல் சிக்கல்கள், உள்நாட்டுப் பொருளாதாரவீழ்ச்சி மற்றும் விரைவான தீர்வுகள் தேவைப்படும் அவசர பொது விரக்திகள் போன்றவற்றில் உள்ளது. இந்தச்சவால்களை எதிர்கொண்டு செல்வதற்கு உடனடி நம்பிக்கை அவசியம்.





பிரணவி

# இலங்கையில் தொடரும் மருத்துவத் துறையின் தோல்விகள்

இலங்கையில் உள்ள பல அரசு மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளன. இதனால், நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சை அளிக்க முடியாமல் போகிறது.

இலங்கையில் மருத்துவ பணியாளர்களின் பற்றாக்குறை ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக, அறுவை சிகிச்சை நிபுணர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களின் பற்றாக்குறை அதிகமாக உள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நிர்வாக சீர்கேடு மருத்துவத் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. மருத்துவமனைகளில் முறையான நிர்வாகம் இல்லாததால், சிகிச்சை தரத்தில் குறைபாடு ஏற்படுகிறது.

**இலங்கையில் மருத்துவ துறையின் தோல்விகள் பின்வருமாறு:**

- ★ **மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை.**
- ★ **பணியாளர் பற்றாக்குறை.**
- ★ **மருத்துவமனைகளின் கட்டமைப்பு மோசமானது.**
- ★ **சுகாதாரத் துறையில் அரசாங்கத்தின் கவனக்குறைவு.**

**இலங்கை மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள தோல்விகள் சில:**

**பேராதனை வைத்தியசாலை:**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் பயன்பாடு இலங்கையில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது, ஏனெனில் இந்த மருந்துகளை பரிந்துரைத்த நோயாளிகளிடையே சுகாதார பிரச்சினைகள் மற்றும் இறப்புகள் கூட உள்ளன.

இந்தியாவைச் சேர்ந்த புபிவாகைன் என்ற மயக்க மருந்து கொடுக்கப்பட்டதால் ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். அதே மருந்தால் கர்ப்பிணி பெண் ஒருவர் உயிரிழந்த சிறிது நேரத்திலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது அப்பகுதி மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால், இந்திய மயக்க மருந்தைப் பயன்படுத்துவதை சுகாதார அமைச்சகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

பதிவு செய்யப்படாத சப்ளையர்களிடம் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக ‘ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஶ்ரீலங்கா நிறுவனம்’ உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.





அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு தேசிய மருந்து கட்டுப்பாட்டாளர் பதிவு விலக்கு அளித்திருப்பது குறித்தும் மனுவில் கவலை தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கில் சாவோரைட் பார்மாசூட்டிகல்ஸ் மற்றும் கௌசிக் தெரபியூட்டிக்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வழக்கை தொடர அனுமதித்த உச்ச நீதிமன்றம், இந்நிறுவனங்களில் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

மே 2023 இல், இலங்கையில் உள்ள நுவரெலியா மருத்துவமனையில் 10 மருத்துவர்களுக்கு இந்திய மருந்துகள் பார்வைக் குறைபாட்டை ஏற்படுத்துவதாக ஒரு செய்தி வந்தது. இந்த மருத்துவர்கள் கண் அறுவை சிகிச்சைக்கு இந்திய மருந்துகளை பரிந்துரைத்தனர், ஆனால் அவர்கள் பார்வை குறைபாடுகள் குறித்து புகார் செய்தனர்.

கண் சொட்டு மருந்துகளில் கிருமிகள் இருந்ததால் நோயாளிகளின் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கருதுகின்றனர். சுகாதார அதிகாரிகள் இந்த பிரச்சினையை ஆராய்ந்து, மேலும் பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக மருந்தை திரும்பப் பெற்றுள்ளனர்.

**மட்டக்களப்பு அரசு மருத்துவமனை:**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 17 வயது மாணவி உயிரிழந்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தோல் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மாணவி உயிரிழந்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தாயின் குற்றச்சாட்டு: இச்சம்பவம் குறித்து யுவதியின் தாயார் கருத்து தெரிவிக்கையில், எனது மகள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் சிகிச்சை பிரிவில் மருந்துகளை பெற்றுக் கொண்டிருந்த போது திடீரென காய்ச்சலும் வாந்தியும் ஏற்பட்டது. அதன் பிறகு மகள் இறந்துவிட்டாள் என்று குற்றம் சாட்டினார்.

**யாழ்ப்பாணம் அரசு மருத்துவமனை:**

யாழ். போதனா வைத்தியசாலையில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த எட்டு வயது சிறுமியின் கையை தாதி ஒருவர் தவறுதலாக துண்டித்துள்ளார்.

சிறுமியின் உறவினர்கள் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்த மருத்துவமனை அதிகாரிகளை வலியுறுத்துகின்றனர். செவிலியரின் தவறான நடவடிக்கை மற்றும் ஊசி மூலம் சிறுமியின் கை துண்டிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுமியின் குடும்பத்தினருக்கும் தன்னார்வலர்களுக்கும் இடையில் முன்விரோதம் ஏற்பட்டதால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், குறித்த தாதி, நோயாளர்களுக்கு முன்னர் தவறான மருந்து மற்றும் ஊசிகளை செலுத்தியதாகவும், இதன் விளைவாக நோயாளிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவது குறித்து பல முறைப்பாடுகள் வந்ததாகவும் கூறுகின்றனர்.

சர்ச்சைக்குரியதாகக் கருதப்படும் வழக்குகளில், சுகாதார அதிகாரிகள் பொதுவாக விசாரணைக் குழுக்களை நியமிக்கிறார்கள், ஆனால் மருத்துவத் துறை அறிக்கைகளை வெளியிட மறுக்கிறது என்று அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

**மாநில சுகாதாரத் துறையில் மற்ற சமீபத்திய சம்பவங்கள் மற்றும் இறப்புகள்:**

உணவு நச்சுத்தன்மையின் அறிகுறிகளுடன் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 21 வயதுடைய பெண் ஒருவரின் மரணம், Ceftriaxone என்ற நுண்ணுயிர் எதிர்ப்பியை செலுத்தியது. அனாபிலாக்ஸிஸ் நோயால் அவள் இறந்துவிட்டதாக கூறப்படுகிறது.

குளியாப்பிட்டியவில் நான்கு மாதக் குழந்தையொன்று உயிரிழந்த நிலையில், ஹெட்டிபொலவில் பெண்டாவலன்ட் தடுப்பூசி போடப்பட்டு நலமாக இருந்ததாக அவர் தெரிவித்தார்.



> சமீபத்தில் கட்டப்பட்ட இரண்டாவது விலையுயர்ந்த கட்டடமாக ராமர் கோயில் உள்ளது. 2,989 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட சர்தார் வல்லபாய் படேலின் 'ஒற்றுமை சிலை' முதல் இடத்திலும், 836 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய நாடாளுமன்றக் கட்டடம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.




இலங்கை தேசிய கண் வைத்தியசாலையில் லென்ஸ் மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 35 வயது பெண் உயிரிழந்துள்ளார்.

சிசேரியன் அறுவை சிகிச்சையின் போது கர்ப்பமாக இருக்கும் தாய் ஒருவருக்கும், குடலிறக்க அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட இருந்த வயோதிபப் பெண்ணுக்கும் ஏற்பட்ட இரண்டு மரணங்களைக் கையாள்வதில், பேராதனை மருத்துவமனையில் பியூபிவாகைன் என்ற முதுகுத்தண்டு மயக்க மருந்து காரணமாக, இது கொண்டுவரப்பட்டதாக அவர் கூறினார்.


WOR இன் கீழ், மீண்டும் ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தால். அதுவும் இந்த மருந்தை முன்பே பதிவு செய்திருந்தது ஆனால் பதிவு காலாவதியானது. இந்த நிறுவனம் இந்த டெண்டருக்காக இந்திய கிரெடிட் லைன் (ஐசிஎல்) கீழ் ஏலம் எடுத்தது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, நாட்டின் சுகாதார சேவையை கடுமையாக பாதித்துள்ளது. பொது சுகாதார நிறுவனங்கள் மருந்து தட்டுப்பாடு, ஒத்திவைக்கப்பட்ட அறுவை சிகிச்சைகள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் இழப்பை எதிர்கொள்கின்றன. 1,000 க்கும் மேற்பட்ட மருத்துவ வல்லுநர்கள் சமீபத்தில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்,

மேலும் கடந்த ஆண்டில் பல்வேறு நேரங்களில் அத்தியாவசிய மருந்துகள் தீர்ந்துவிட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. கூடுதலாக, பல பொது மருத்துவமனைகள் இயந்திர பராமரிப்பு, பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் தேவையான இரசாயனங்களின் குறைந்த விநியோகம் போன்ற சிக்கல்களால் ஆய்வக சோதனைகளை நிறுத்த வேண்டியிருந்தது. நாட்டின் விநியோகத்தில் 80% பங்கு வகிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் பற்றாக்குறை குறிப்பாக கவலையளிக்கிறது.

இலங்கையில் மருத்துவத் துறையின் தோல்விகள் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளன. அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், நிலைமை மேலும் மோசமடையும்.

> இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, நாட்டின் சுகாதார சேவையை கடுமையாக பாதித்துள்ளது. பொது சுகாதார நிறுவனங்கள் மருந்து தட்டுப்பாடு, ஒத்திவைக்கப்பட்ட அறுவை சிகிச்சைகள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் இழப்பை எதிர்கொள்கின்றன. 1,000 க்கும் மேற்பட்ட மருத்துவ வல்லுநர்கள் சமீபத்தில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்,



# வாழ்க்கை

அம்முக்குட்டி

அன்பு ஆனந்தம் தரும்
அமைதி நிம்மதி தரும்
அறிவு உயர்ச்சி தரும்
அழகு துன்பம் தரும்
அகிம்சை மனிதம் தரும்
அகந்தை அழிவு தரும்
அடக்கம் உயர்வு தரும்
அக்கறை பாசம் தரும்
அச்சம் தோல்வி தரும்
அந்நியம் பிரிவு தரும்



பவானி

பாகம்: 01

# இடப்பெயர்வும் நானும்

முதன்முதலாக 1983இல் யூலைகலவரத்தால் பாதிக்கப்பட்டு வந்தவர்களைத்தான் இடம்பெயர்ந்து வந்தவர்களாக நான் கண்டேன். அன்று கண்ட வலி எனது வாழ்க்கையில் பல மாற்றங்களைத் தந்தது.

அதன்பின் நான் 1995 இல் இடம்பெற்ற யாழ் மண்ணின் வரலாறு காணாத இடப்பெயர்வைக் கண்டேன். நான் வசித்தது கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு சிறிய கிராமம். யாழ் இடப்பெயர்வின் போது, எம் மக்களுக்கான நிவாரணப் பணிகளையும், அம் மக்களுக்கான பாதுகாப்புக்களையும், எம் தேசத்துப் புதல்வர்கள் திறம்படச் செய்து இருந்தார்கள்.

எனது வீட்டிலும், வளவிலும் நிறைய இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்தார்கள். ஒரு சாதாரண குடும்பம் இடப்பெயர்வினால் தமக்குத் தெரியாத பிரதேசமொன்றில் முற்றிலும் மாறுபாடான சூழலில் வாழ்வது என்பது மிகவும் கடினமானதே. தம் உறவுகள், உடமைகளை இழந்து, மாறுபாடான சூழலில் பொருந்தி வாழ்வது என்பது மிகவும் கடினமானது. அவர்களின் வெறுமையான முகங்கள் என்னை மிகவும் பாதித்தது. இதனை வாசிக்கும் போது அதை அனுபவித்தவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு புரியும் அந்த எழுத்தில் வடிக்கமுடியாத உணர்வின் வலி.

எனது கிராமம் ஜெயசிக்குறு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களையும் சேர்த்து எல்லா இடம்பெயர்ந்தவர்களையும் அரவணைத்து வாழ்ந்தது. மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான போது பெருமளவிலான மன்னார் மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கினார்கள்.

இம் மக்களுக்கான நிவாரணப்பணிகள் கூட்டுறவு சங்கம் மூலம் செயற்படுத்தப்பட்டது. அப்போது நான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றினேன்.

நாம் தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழ அரசியற்துறையுடன் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டோம். இராணுவ நடவடிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி, இடப்பெயர்வுகளும் தொடர்கதையாக





இடம்பெறத் தொடங்கின.எமது கூட்டுறவுச் சங்கமும்,விரைவில் இடம் பெயர வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் பேசப்பட்டது.நாங்களும் எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை பொதிகளாகக் கட்டி ஆயத்தமாக இருக்கும்படி,எனது கூட்டுறவுச் சங்கப் பணியகத்தினால்கூறப்பட்டது. நான் சங்கத்தில் வேலை செய்வதால், சங்கம்இடம்பெயர உள்ள கிராமத்திற்கே நாமும் செல்ல வேண்டும். எமது கிராமமும் இடம்பெயர்வதால் எனது வளவில் இடம்பெயர்ந்து வந்து தங்கியவர்களும் வெளியேறி விட்டனர்.எமது கிராமம்இயல்பு நிலை தொலைத்து, போர்க்காலச்சூழலில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனது கணவரை இழந்த நிலையிலும், மனமுடையாது வாழ்க்கையோடு எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்த எனக்கு, இது முற்றிலும் புதிய அனுபவத்தைத் தரப்போகிறது என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை. சண்டை முடிந்துவிடும், நாம் நமது வீட்டுக்கு திரும்பி விடுவோம் என்று நான் நம்பினேன்.

நான் இதனை கதை வடிவில் சொல்லாமல் ஒரு பெண்ணாக நான் பட்ட அவலங்களைக் கூற முனைகிறேன்.எனது இரு பிள்ளைகளுடன்தனியாக வசித்தேன் நான். எறிகணையின்தாக்குதல் எமது பகுதியில் வீரியமாக இருந்ததால், எனது பிள்ளைகள் எனது வீட்டில் படுப்பதில்லை.இரவு நேரத்தில் வேறிடத்தில் தங்குவார்கள்.

இது எனது மூட நம்பிக்கையாக கூட இருக்கலாம். ஆடி மாதத்தில் இடம் பெயர்ந்தால்,ஏழு ஆடி அலைய வேண்டி வரும் என்பார்கள். இதை எண்ணி, ஆடி முடிய இன்னமும் ஒரு நாள்தானே இருக்கிறது என வீட்டிலேயே இருந்து விட்டேன். பிள்ளைகள் அப்போது என்னுடன் இல்லை. ஊரே வெறிச்சோடிப் போயிருந்தது. அன்று மாலை பலத்த ஏறிகணை வீச்சு எனது வளவிலும் இரண்டு எறிகணைகள் விழுந்து வெடித்தன. யாருமே இல்லாதபடியால் உயிர்ச்சேதம் எதுவுமில்லை.



எனது வளவில் எறிகணை வீழ்ந்து வெடித்ததை அறிந்த என் சக பணியாளர்கள் இரவு பாரவூர்தியுடன் எனது வீட்டுக்கு வந்தனர். எனது பொருட்கள்,வீட்டின்கதவு,யன்னல், சூரிய மின்பிறப்பாக்கி எல்லாவற்றையும் ஏற்றினர். அத்தனை பிரச்சனைகளுக்கு நடுவிலும் எனது மூட நம்பிக்கையைகேலி செய்யவும் அவர்கள் மறக்கவில்லை. இரவு 9மணிபோல நாம் வீட்டைவிட்டு இடம் பெயர்ந்து சென்றோம்.

எம்மைப்போல இடம் பெயர்பவர்கள் எத்தனையோபேர் வீதிவழியே அங்குமிங்குமாக அவசர அவசரமாகப்போய்க் கொண்டிருந்தார்கள். கரிய இருள். கண்சிமிட்டும் நட்சத்திரங்களுக்கிடையே பாதி நிலவு வரத் தொடங்கியது. இவற்றையெல்லாம் ரசிக்கும் மனநிலை யாரிடமும் இல்லை. எனக்கு முதன் முதலாக ஒரு இடப்பெயர்வு.

ஏற்கனவே எமது சங்கம் ஊற்றுபுலத்திற்கு இடம்பெயர்ந்திருந்தது. ஒரு காணியில் கொட்டில் போட்டுத் தங்கஎனக்கும் இடம் தந்திருந்தார்கள்.நாங்கள் போகும்போதுஇரவு பத்து மணியளவு ஆகிவிட்டது. ஒரு மாமரத்தின் கீழ் குவிக்கப்பட்டிருந்த மணல் கும்பியின் மேல் பொருட்களை இறக்கினோம். இரவுப்பொழுது மணற்கும்பியிலேயே கழிந்தது.

என் மனநிலை சொல்லமுடியாத சோகமாகியது.என்னுடைய கணவரின் இழப்பின் வலி இப்போது இன்னும் அதிகமாகத் தெரிந்தது. அவர் இருந்திருந்தால் மனதளவில் எவ்வளவு தைரியமாக இருந்திருக்கும்? இருவருமாக இந்தப் பிரச்சனைகளை எதிர்கொண்டிருக்கலாம்.

என்னோடு கூட வந்த பணியாளர்கள் என்னுடனே நின்று, விடிந்ததும்,தற்காலிக கொட்டில் ஒன்று அமைத்துத் தந்தார்கள்.நான் திரும்ப கோணாவில் என்ற கிராமத்திற்கு சென்று, எனது பிள்ளைகளை என்னுடன் கூட்டி வந்தேன்.

எனது சங்கத்தின் தலைவர் பற்றி இதில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.தனது குடும்பத்தைக் கூட மறந்து, எமக்காக எம்மோடு கூடநின்று ஒரு தாய்போல எங்களைக்



கவனித்துக் கொண்டார்.அத்துடன் அந்தக் காணி உரிமையாளரும்,என்னை ஒரு சொந்தச்சகோதரி போல பார்த்துக் கொண்டார். நான் வேலைக்கு போய் வரும் வரை எனது இரு பிள்ளைகளையும்பார்த்துக் கொள்வார்.இந்த இடத்தில் சுமார் ஒரு மாதம்தான் இருந்திருப்போம். மீண்டும் அடுத்த இடப் பெயர்வு ஆரம்பித்து விட்டது.

ஊற்றுப்புல கிராமத்தையும் எறிகணை விடவில்லை.அங்கு விழுந்த எறிகணைகள் மீண்டும் ஒரு இடப்பெயர்வைத் தோற்றுவித்தன. காலங்கள் குறிப்பிட முடிய வில்லை. இவ் இடப்பெயர்வுகள் எல்லாம் 2008,ஆகஸ்ட் இல் நடந்தன. அதன்பின் இடம்பெயர்ந்து செல்லும் எல்லா இடங்களிலும் ஒருசிலநாட்கள் மட்டுமே தங்க முடிந்தது.

மதியப் பொழுதொன்றில், மூட்டை மூடிச்சுகளுடன் பாரவூர்தியில் வட்டக்கச்சி நோக்கி பயணமானோம். அவ்வளவு பொருட்களையும்கட்டி, ஏற்றுவது என்பது சாதாரண வேலையல்ல. தனித்துச் செய்யும்போது, எவ்வளவு தான்மனத்துணிவு இருந்தாலும் உடலும்,மனமும் சோர்வுறுவதை தவிர்க்க முடியாது. ஒருவாறாக மாலைப்பொழுதொன்றில் வட்டக் கச்சியை அடைந்தோம். அங்கு ஒரு வீட்டின் காணியில் சிறிது இடம் தாருங்கள் எனக் கேட்ட போது இல்லையெனமறுக்கப்பட்டது. எனது பிள்ளைகள் சிறியவர்கள்.

எனக்கு தெரிந்தவர்களுக்கு அருகில் நான் இருப்பதுதான் எனக்கு உதவியாக இருக்கும். நாங்கள் தங்கும் இடம் நான் வேலைக்கு போகும்தூரத்திலும், பாடசாலைக்கு அருகேயும் இருந்தால்தான் பிள்ளைகளை விட்டுவிட்டு என்னால் இலகுவாக வேலைக் குப் போக முடியும்.

நான் வேலையில் நிற்கும் சமயம் எறிகணைவீச்சு நடந்தால் பிள்ளைகளை அயலவர்கள்கவனித்துக் கொள்வார்கள்.

இப்படிப்பலதையும் சிந்தித்த போது அந்தக்காணி எனது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மிகப் பொருத்தமாக இருந்தது. அக் காணியின் உரிமையாளரும் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வந்து நின்றார். ஆனால் அவரோ தயவு தாட்சண்யம் எதுவுமின்றி தரமுடியாது என மறுத்து விட்டார். இத்தனைக்கும் அவரும் ஒரு பெண்தான்.

நான் இரண்டு பிள்ளைகளுடன் தெருவோரம் நின்றேன். உரிமையாளருக்கு

சிறிது கூட மனம் இரங்கவில்லை. அந்நிலையில், நான் என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நின்றேன். அவ்வழியாக வந்த எம் தேசப்புதல்விகள் என் நிலையை உணர்ந்தனர். அந்த அம்மாவிடம் கடுமையாக பேசி,எனக்கு ஒரு இடம் வாங்கித் தந்தார்கள். இவையெல்லாம் முடியும் போது இரவாகி விட்டது.

தொடரும்....





ஐங்கரன்

# தமிழர் தாயகத்தில் பௌத்த மயமாக்கல்: சிங்கள சிறிலங்காவின் சுதந்திரம்




இலங்கை சுதந்திரத்திற்கு பின்னரான ஈழத்தில் வட கிழக்கு, மலையகம் வாழும் சிறுபான்மையின தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்ற உணர்வலைகளுக்கு சிங்கள அரசு களால் உள்ளாக்கப் பட்டனர்.

பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி நான்கில் கிடைத்த இலங்கையின் சுதந்திரம், தமக்கான சுதந்திரம் என்று தமிழர் களால் உணரப்படாமல் தள்ளிப் போனமைக்கான முக்கிய காரண மாக ஆட்சியாளர்களின் விரோத இனத்துவேசம் அமைகின்றது.

## ஆட்சியாளர்களின் விரோதமும் இனத் துவேசமும்:

பிரித்தானியர் சுதந்திரத்தை வழங்கும் போது இலங்கையின் அனைத்து இனத்தவர்களுக்குமே வழங்கினராயினும் துரதிர்ஸ்ட வசமாக இலங்கையின் சுதந்திரம் பௌத்த சிங்களவர்களுக்காக போனது காலத்துயரமே.

இந்நிலைமையானது நாட்டின் சுதந்திரம் என்பது இலங்கை யில் வாழும் ஒரு பகுதியினருக்கு என்றாயிற்று. பிரித்தானியர் இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்தை தமதாக்கியவர்கள் நாடும்




தங்களுடையது, ஆட்சியும் தமக்கானது என்று முடிவு செய்து, அதை நிலை நிறுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை சிங்கள அரசுகள் மேற்கொண்டன. அதன் ஒரு அம்சமாக தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டனர். தமிழர்களைக் காலத்திற்குக் காலம் வஞ்சித்துத் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பேரினவாதிகளால் அவர்கள் அடிமைப் படுத்தப்பட்டனர்.

## கறைபடிந்த இனக் கலவரங்கள்:

சிறிலங்காவின் வரலாற்றில் கறைபடிந்த வடுக்களைப் பதிவாக்கிக் கொண்ட இனக் கலவரங்களையும், இனப் படுகொலைகளையும்

உருவாக்கிய சிங்கள அரசுகளின் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் அனுஸ்டிக்க வேண்டும் என பேரினவாதம் கட்டாயப்படுத்துவதை கண்டிக்காமல், உலகம் கண்மூடிக் கொண்டிருப்பது கவலைக்குரியதே.

சிறிலங்காவின் சுதந்திரதினம் என்பது சிங்களவர்களிற்கானது என்று ஆக்கப்பட்டபோது நாட்டின் சுதந்திர தினம் சிறுபான்மைத் தமிழ் மக்களிற்கு வேதனைக்குரிய நாளாகிப் போனது. சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பதே ஒரேவழி என்று தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே முடிவு செய்து கடைப்பிடிக்கின்றனர்.

தமிழர்க்கான சுதந்திரத்தை தர மறுத்துவிட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள் என்றால் அது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்? பிரித்தானிய காலனியாதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பெப்ரவரி நான்காம் தினமே முன்னைய இலங்கையின் (Ceylon ) சுதந்திர தினமாக அனுஷ்டிக்கப்பட்டது யாவறும் அறிந்ததே.

## சிறிலங்காவின் சுதந்திரம் சிங்களவர்களிற்கானது

ஆயினும் இன்றைய சிறிலங்காவில் (Sri Lanka) சிங்களவர்களுக்கு சுதந்திரம் கிடைத்த 75 வருடங்கள் ஆகினாலும், சிறுபான்மையின தமிழர் இரண்டாம் தர பிரஜைகளாக அல்லது ஏதிலிகளாக வாழும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கான தேசிய எழுச்சி பிரித்தானிய காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வடிவத்திலும் பரந்துபட்ட மக்களை இணைத்து நடாத்தப்பட்ட போராட்டமாகும். இந்தியாவின் போராட்டத்தின் பக்க விளைவுகள் இலங்கையிலும் பிரதிபலித்ததாய் இருந்தது என்பதே சாட்சியமாகும். ஆங்கிலேயர்களின் பிரித்தானிய நவ காலனித்துவ சுரண்டல் முறைமைக்கு தம்மை மாற்றிக்கொண்டு, இந்தியாவை விட்டு வெளியேறும் போது இலங்கையையும் விட்டு வெளியேறினர்.

உண்மையில் இலங்கை தனது சுதந்திரத்திற்காக இந்தியா அளவிற்கு போராடவில்லை. ஆயினும் நடந்த போராட்டங்களில் இலங்கையின் சுதந்திரத்திற்கான தமிழ் மக்களின் பங்களிப்பும் தியாகங்களும் அளப்பரியதாகும்.

## சிங்கள அரசால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினம்:

இதுவே இன்று வரை சுதந்திர தினம் சிறுபான்மை வட கிழக்கு, மலையக தமிழ் மக்களால் கொண்டாடப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது. ஆண்டாண்டு காலமாக சிங்கள அரசால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின தமிழ் மக்கள் தமது சம உரிமைகளை கோரி அகிம்சை, ஆயுதப் போராட்டம் என்று பல்வேறு வழிகளில் போராடி வந்தனர்.

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மையை புரிந்து கொள்ளாத இலங்கை ஆளும் வர்க்கம் இவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி ஆயுத ரீதியில் ஒடுக்க முற்பட்டதன் விளைவு, தமிழீழ ஆயுத போராட்டமாக வீரியம் அடைந்து, இருபது ஆண்டு காலம் தமிழீழ அரசின் நிர்வாகத் திறமை முழு உலகிற்கே புலப்பட்டது.

சிறிலங்காவின் சுதந்திரம் என்பது தமிழரை ஒடுக்கும் ஒரு அரசின் கொண்டாட்ட தினமே ஒழிய சிறுபான்மையின தமிழரின் கொண்டாட்ட தினம் அல்ல என்ற உணர்வலைகளை மேலும் மேலும் அதிகரிக்க செய்தமைக்கு சிங்கள அரசின் கொடூர ஆட்சியே காரணமாகும்.

## சிங்கள அரச ஒடுக்குமுறை:

இதனாலேயே சிறிலங்காவின் சுதந்திர நாள் தமிழர் தாயகம் எங்கும் நீண்ட காலமாக பகிஷ்கரிக்கப்படும் ஒரு தினமாகவும் பரிணாமம் அடைந்துள்ளது. சிறிலங்காவில் தமிழர் உரிமை மறுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர்வலை இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

சிறிலங்காவின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாளாக தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. சிங்களவர்களின் சுதந்திர தினத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்புப் போராட்டங்களும், பேரணிகளும் தமிழர் தாயகம் எங்கும் காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.






போர் மௌனித்த 2009 முள்ளி வாய்க்கால் பேரவலத்தின் பின்னரும், சிங்கள பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இன்னமும் தொடர்கின்றன. ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்திருந்தாலும் தமிழ் மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதற்கு சிறிலங்கா அரசின் இனத்துவேச ஆட்சியே காரணியாகின்றது.

### தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த மயமாக்கல்:

ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 2009 இல் மௌனித்த பின்னரும் தமிழர் தாயகப் பகுதிகளில் பொது மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் என்பன இன்று வரை புதிய புதிய வடிவங்களில் தொடர்கிறன. போர் முடிந்து 14 ஆண்டுகள் கழிந்தும் பயங்கரவாத தடைச்சட்டம் இன்று வரை நீக்கப்படவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

தமிழரின் இனப் படுகொலைக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசு இது வரை எவ்வித பொறுப்பும் கூறவில்லை. தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் தொடர்ந்து சிங்கள அரசு ஏமாற்றி வருகிறது. இதனாலேயே பெப்ரவரி 4 ஆம் திகதியை காலம் காலமாக தமிழர்கள் கரிநாளாக தான் அனுஸ்டித்து வருகிறார்கள்.

இறுதிப் போரில் அரச படைகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை இன்னமும் தேடி வருடக்கணக்காக போராடி வருகிறார்கள். தமிழ் அரசியல் கைதிகள் பதினைந்து வருடங்களுக்கு மேலாக தமது விடுதலையை எதிர்பார்த்து சிறையில் வாடுகிறார்கள். தமது பூர்வீக நிலங்களை பறிகொடுத்துவிட்டு இன்றுவரை தமிழ் மக்கள் வீதியில் போராடி வருகிறார்கள். எதையுமே பொருட்படுத்தாது சிறிலங்கா அரசு சர்வதேசத்தை மிக சாணக்கியமாக ஏமாற்றி வருகிறது.

### தொடரும் சிங்கள குடியேற்றங்கள்:

இதேவேளை தமிழர் பகுதிகளில் தமிழருக்கு அனுமதி வழங்காமல் சிங்களக் குடியேற்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் கைது செய்யப்பட்டு கொடூரமாக அச்சுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்பு தற்போது கேள்விக் குறியாகியுள்ள நிலையில், சிறிலங்காவின் சுதந்திர நாளை தமிழ் மக்கள் கரிநாளாக பிரகடனப்படுத்தி, தமது எதிர்ப்பை சிங்கள அரசுக்கும் தெரிவிப்பதுடன் சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் உண்மை நிலையை உரத்துக்கூறி வருகின்றனர்.

தமிழர்கள் தமது உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், தமது இருப்பை உறுதி செய்வதற்கு தாயக மண்ணில் தொடர்ந்து போராட வேண்டிய சூழ்நிலைக்கு சிங்கள அரசு தள்ளியுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, தமிழ் கட்சி பேதங்களை கடந்து சகல தரப்பினரின் ஒத்துழைப்புடன் சிங்கள அரசிற்கு எதிர்ப்பை காட்டுவார்கள்.

### கட்டாயப்படுத்தப்பட்டு திணிக்கப்பட்ட சுதந்திர தினம்:

2010 இன் பின்னர், மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, தமிழர் தாயகம் எங்கும் சுதந்திர தின நாளில் சகலரும் சிங்கக் கொடியை ஏற்றவேண்டும் என்று படைத்தரப்பு கண்டிப்பாக உத்தரவிட்டது. வர்த்தக நிலையங்கள், ஆட்டோக்கள் மற்றும் வாகனங்கள் என எங்கும் தேசியக்கொடி கட்டப்பட வேண்டும் என அரசின் இராணுவத்தால் கட்டாயப்படுத்தப்பட்டது. இது விடயத்தில் தயக்கம் காட்டுவோர் மீது படையினர் மேற்கொண்ட அடாவடித்தனங்கள் கொஞ்சமல்ல.

சுதந்திர தினம் என்பது ஒவ்வொருவரும் மனம், மெய், மொழிகளால் நினைந்து ஆத்மார்த்தமாக அனுஸ்டிப்பதாகும். சுதந்திர தினத்தை அனுஸ்டிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவது மகிந்தவின் ஆட்சியில் நடந்த மிக மோசமான கொடூர சம்பவமாகும்.

### தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமை:

கடந்த பல ஆண்டுகளாக சுதந்திர தினத்தை வெற்றி விழாவாக சிங்களவர்கள் நாங்கள் கொண்டாடுகிறோம், நீங்களும் தேசியக் கொடியைத் தூக்கிப்பிடிக்க வேண்டும் என்றால் இனமானம் உள்ள எந்தத் தமிழனும் செய்யப் போவது இல்லை.

தமிழ் இனத்தை அழித்துவிட்டு அந்த அழிப்பை, சிங்கள அரசுகள் வெற்றித் திருநாளாகக் கொண்டாட, அதற்கு சிங்கக் கொடியைத் தூக்கிப்பிடிப்பது என்பது எவ்வகையிலும் சாத்தியமாற்றதாகும்.

தமிழர் தாயகம் எங்கும் பெப்ரவரி 4 ஆம் திகதி, சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து தமிழ் மக்கள் எழுச்சி பயணத்தில் ஒன்றுகூட வேண்டிய வரலாற்றுக் கடமை அனைவருக்கும் உள்ளது.



ஒருவன்



# பேரவையில் தமிழ் இன அழிப்புக்கான நீதி நீர்த்துப் போகிறதா?

## பிளவுபட்டுக்கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள்:



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல விளக்கமளிப்பும் கூட்டத்தொடரில் இடம்பெறவுள்ளது.

ஜெனிவா நகர்வுகள் குறித்து சுவிட்சர்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அண்மையில் தெரிவித்திருந்தார். மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளில் இலங்கை அடைந்துள்ள இலக்குகள் தொடர்பில் முழுமையான அறிக்கையை சமர்பிக்க உள்ளதாகவும் அலி சப்ரி கூறியிருந்தார்.

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்து மார்ச் மாதம் 4 ஆம் திகதி கவனத்தில் கொள்ளப்பட உள்ளது.

### ரணில் ஆற்றிய உரை:

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரையாற்றியிருந்தார்.

இதன்போது, தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் வளமான எதிர்காலத்தை உறுதிசெய்து, இலங்கையில் வாழும் அனைத்துப் பிரிவினருக்கும் பயனளிக்கும் நிலைபேறான மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி இலங்கையை இட்டுச்செல்வதே தனது நோக்கமாகும் எனக் கூறியிருந்தார்.





என்றாலும், இலங்கை இராணுவம் மீதான போர்க்குற்ற விவகாரங்கள், பாதிக்கப்பட்ட தரப்புக்கான நீதியை வழங்கல், காணாமல்போனோர் விவகாரம் உட்பட இலங்கை அரசியலில் பேசுபொருளாக உள்ள மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்கள் குறித்து அவர் எவ்வித கருத்துகளையும் தெரிவித்திருக்கவில்லை.

இலங்கையின் மனித உரிமைகள் பற்றி முன்னேற்றங்கள் தொடர்பில் ஐ.நா. எழுப்பியிருந்த கேள்விகளுக்கு பதில் அளிப்பதையும் அவர் தவிர்த்திருந்தார்.

## நீர்த்துப்போகுமா தமிழ் இனப்படுகொலைக்கான நீதி?

இலங்கைத் தீவில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலைக்கான நீதியை வழங்கும் செயல்பாடு நீர்த்துப்போகும் நிலைக்கு வந்துள்ளது. ஐ.நாவில் 2010ஆம் ஆண்டுமுதல் 2015ஆம் ஆண்டுவரை கொடுக்கப்பட்ட அழுத்தம் தற்போது குறைந்துள்ளன.

2015ஆம் ஆண்டில் ரணில் - மைத்திரி தலைமையில் அமைந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வெளிவிவார அமைச்சராக பணியாற்றிய மங்கள சமரவீர, இலங்கை மீதான ஜெனிவாவின் அழுத்தங்களை குறைத்துக்கொள்ள கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தார்.

மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 40/1 கீழான யோசனைகளுக்கு இலங்கை இணை அனுசரணையை வழங்கியது. அது மங்கள சமரவீரவின் முயற்சியிலாகும்.

இதன் பின்னரான காலப்பகுதியில் ஜெனிவாவில் இலங்கை மீதான அழுத்தம் மெல்ல மெல்ல குறைந்துவந்தது. தற்போது இலங்கை விவகாரம் ஒரு குறுகிய பேசுபொருளாக மாத்திரமே மனித உரிமைகள் பேரவையில் உள்ளது.

## தமிழ் சமூகத்தின் ஒற்றுமை அவசியம்

இந்த விவகாரத்தை நீர்த்துப்போகாமல் வைத்திருப்பது புலம்பெயர் தமிழ் சமூகத்தின் கடமையாகும். புலம்பெயர் தமிழர்களின் கடுமையான அழுத்தங்களும் இதற்கு அவசியமாகும். அத்துடன், ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகம் முழுவதும் பாரிய கவனயீர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன.

இலங்கைத் தீவில் தமிழர் அரசியலில் ஏற்பட்டுள்ள பிளவுகள் மற்றும் ஒருமித்த கருத்தில்லாமையும் தமிழ் இனப்படுகொலைக்கான நீதியை பெற்றுக்கொள்ளும் செயல்பாடு நீர்த்துப்போவதற்கான காரணியாக மாறி வருகிறது.

தமிழ் இனப்படுகொலைக்கு நீதி மறுக்கப்படும் நிலையில்அண்மையில் நடைபெற்ற தலைவர் தெரிவு மற்றும் பொதுச் சபைக் கூட்டத்தின் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள்ளும் பாரிய பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

தமிழர் அரசியலில் ஓரளவு வலுவாக சக்தியாகவும் தென்னிலங்கையுடன் பேரம் பேசும் சக்தியாகவும் தமிழரசுக் கட்சியும் அது தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே கடந்த ஒரு தசாப்தமாக இருந்து வந்தது.

ஆனால், இன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதறிப்போயுள்ளன. கூட்டமைப்பும் பிளவுபட்டுவிட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எந்தவொரு கட்சியுடனும் ஒத்து போகாத நிலைப்பாட்டில் பயணிக்கிறது.

வடமாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணி, செயிழந்த ஒன்றாக உள்ளது.

தமிழ் கட்சிகளின் ஒற்றுமையின்மை என்பது தமிழ் இனப்படுகொலைக்கான நீதி மறுக்கப்படுவதற்கான சூழலை சர்வதேச அரங்கில் உருவாக்கிவிடும் என தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ளனர்.



> இலங்கைத் தீவில் தமிழர் அரசியலில் ஏற்பட்டுள்ள பிளவுகள் மற்றும் ஒருமித்த கருத்தில்லாமையும் தமிழ் இனப்படுகொலைக்கான நீதியை பெற்றுக்கொள்ளும் செயல்பாடு நீர்த்துப்போவதற்கான காரணியாக மாறி வருகிறது. தமிழ் இனப்படுகொலைக்கு நீதி மறுக்கப்படும் நிலையில்அண்மையில் நடைபெற்ற தலைவர் தெரிவு மற்றும் பொதுச் சபைக் கூட்டத்தின் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள்ளும் பாரிய பிளவுகள் ஏற்பட்டுள்ளன.



# வரலாறு காணாத புலம்பெயர்வு

ஒரு வரலாறு காணாத புலம் பெயர்வு தற்போது இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது . நாட்டில் யுத்த சூழ்நிலை நிகழ்ந்துகொண்டிருந்தபோதுகூட இந்த அளவு புலம்பெயர்வு இடம்பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை. அதிலும் குறிப்பாக புத்திஜீவிகளின் இடப்பெயர்வு.

என்னென்ன காரணங்கள் மக்களை தற்போது இப்படியான புலம்பெயர்வுக்கு சரவாரியாக இட்டுச் செல்கின்றது என சற்று நோக்குவோமாயின்,

‘நாளை என்ன நடக்கும்?’ என்கிற நிச்சயமற்ற தன்மையானது அண்மைய காலத்தில் முன்பைக்காட்டிலும் அதிகமாகவே மக்களது மனதில் எழுந்து ஒருவித அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார ரீதியிலும் சரி, அரசியல் ரீதியியலும் சரி மக்களது அதிருப்தியானது இந்த நாட்டை விட்டு போனால் போதும் என்கிற எண்ணத்தினை விதைத்துள்ளது எனலாம்.



எந்தவித பொருளாதார மீட்சியும் இல்லாமல் நாடு தொடர்ந்தும் கடன் வாங்கிக்கொண்டிருக்கும் நிலையில், இந்த கடன் சுமையானது எதிர்காலத்திலும் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லாது. இலங்கை அரசியல்வாதிகளின் சிந்தனை மற்றும் நடவடிக்கைகளின் மீதுள்ள அதிருப்தி மற்றும் நம்பிக்கையீனம், மீண்டும் மஹிந்த ராஜபக்ச குடும்பத்தினரே ஆட்சிக்கு வரலாம் என்கிற அச்சம் போன்றவையும் இவ்வாறான புலம்பெயர்வுகளுக்கான காரணங்கள்.

சம்பள உயர்வு இல்லாத இக்காலகட்டத்தில் அதிகரித்திருக்கும் வாழ்க்கைச் செலவு மற்றும், அதிகப்படியாக அறவிடப்படும் வரி போன்றன மக்களை மிகப்பெரிய அழுத்தத்திற்கு கொண்டு சென்றுள்ளது. மக்களின் கொள்வனவு சக்தியானது கடந்த காலங்களைவிட சடுதியாக குறைந்துள்ளது. தம்முடைய வாழ்க்கைத்தர வீழ்ச்சியினை ஏற்றுக்கொள்ள விரும்பாத பலரும்கூட வேறு நாடுகளுக்கு செல்லத்தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக வைத்தியர்கள் உட்பட்ட சமூக அந்தஸ்துள்ளவர்கள் தமது உழைப்புக்கேற்ற வாழ்க்கைத்தரமானது இலங்கையில் கிடைக்காதபோது, சர்வதேச சந்தையில் அவர்களுக்கு இருக்கும் டிமாண்ட் அதிகம் என்பதை கருத்திற்



> எந்தவித பொருளாதார மீட்சியும் இல்லாமல் நாடு தொடர்ந்தும் கடன் வாங்கிக்கொண்டிருக்கும் நிலையில், இந்த கடன் சுமையானது எதிர்காலத்திலும் நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லாது. இலங்கை அரசியல்வாதிகளின் சிந்தனை மற்றும் நடவடிக்கைகளின் மீதுள்ள அதிருப்தி மற்றும் நம்பிக்கையீனம், மீண்டும் மஹிந்த ராஜபக்ச குடும்பத்தினரே ஆட்சிக்கு வரலாம் என்கிற அச்சம் போன்றவையும் இவ்வாறான புலம்பெயர்வுகளுக்கான காரணங்கள்.

கொண்டு பெருவாரியாக வெளியேறிக்கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த வருடத்தினைப் போலவே ஒரு மிகப்பெரிய பொருளாதார தட்டுப்பாடு, அதனால் ஏற்பட்ட அசௌகர்யங்கள், மரணங்கள் போன்றவை இனியும் நிகழாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்கிற அச்சம், மற்றும் தற்போது நமது சுகாதாரத் துறையில், நீதித்துறையில் ஏற்பட்டுள்ள சீரழிவினால் தம்முடைய பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும் என்கிற அச்சம் போன்றவையும் மக்களை வேறு நாடுகளுக்கு செல்லவைத்துக்கொண்டிருக்கின்றது.

மேலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வெளிநாட்டில் உள்ளவர்கள் பொருளாதார தன்னிறைவு மற்றும் பாதுகாப்புடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள் என்கிற மனோநிலை அதிகமாக காணப்படுவதால் , தற்போதைய இலங்கை நிலைமையினைக் காரணமாக வைத்துக்கொண்டு புலம்பெயர்பவர்களும் அதிகம்.



திடீரென அதல பாதாளத்திற்கு வீழ்ச்சியுற்ற இலங்கை நாணயப்பெறுமதியும் புலம்பெயர்விற்கு வித்திட்டது எனலாம். அதாவது, முன்பு வெளிநாட்டிலிருந்து உழைத்தனுப்பும் பணமானது தற்போதைய இலங்கை நாணய பெறுமதி வீழ்ச்சியினால் சடுதியாக இரண்டு மூன்று மடங்குகளாக அதிகரித்துள்ளமையானது வீட்டுக்கு ஒருவராவது வெளிநாடு சென்றால் நல்லது என்கிற நிலையை தோற்றுவித்துள்ளது.

இவை எல்லாவற்றையும்விட இன்னுமொரு காரணம்தான் ‘பதற்றப்படுதல்’ என்பது. தமக்கு அறிந்தோர் தெரிந்தோரெல்லாம் நாட்டைவிட்டு வெளியேறுகையில் தாமும் செல்லவேண்டும் என்கிற உந்துதலுக்கு அல்லது பதற்றப்படுத்தலுக்கு உள்ளாகும் மனோநிலை ஒருபோதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

கொரோனா காலத்தில் எப்படி ஒருவித பதற்றத்துடன் முட்டிமோதி சூப்பர் மார்க்கெட்டுக்களில் இருந்து பொருட்களை வாங்கி பதுக்கினோமோ அதேபோன்றதோர் பதட்ட நிலை என்றுகூட கூறலாம்



# தாயின் கண்ணீர்

அன்பு மகனே!
என்னவென்று சொல்ல
இன்னிலை எந்த தாயும்
அனுபவித்திராத வேதனை.

உன்னை மடி சுமந்து
உயிரைக் கொடுத்து
பெற்றெடுத்து
உச்சி மோர்ந்து
உதிரத்தை பாலாக்கி ஊட்டி
உள்ளம் மகிழ வளர்த்தேனே!

உயிரைக் காக்கவென - தாய்
உறவுகளென எண்ணி
தமிழ்நாட்டில்
தடம் பதித்தாய்.

சொந்தமண் பிரிந்த
சோகம் தீர முன்னே
செய்யாத குற்றத்திற்காய்
இளவயதில் சிறை சென்றாய்!

34 ஆண்டுகளாய்
என் கண்ணீரே
காவிரியானதுவோ
யார் அறிவார் என்
துயரத்தை?
உனை மீட்க போராடி
தோற்றேனா?

அகிம்சை பேசும்
பாரத அரசின் கண்களுக்கு
அன்னையின் கண்ணீர்.. வலி
வேதனை.. எதுவும்
தெரியவில்லை!

இறுமாப்புடன்
ஏளனத்தோடு இருந்த
பாரத அரசிடம்
உனை மீட்பதற்காய்
போராடி களைத்துப்
போனேன்.

தள்ளாத இவ் வயதிலும்
என் செல்ல மகனே
என் வீட்டில்
என் கையால்
ஒரு வேளை
சமைத்து தர முடியாத
பாவியானேன்
என் மகனே!

செய்யாத தப்புக்காய்
கொலையுண்ட கோவலனுக்காய்
கண்ணகி மதுரையை
எரித்ததாய் புராண வரலாறு

விடுதலை பெற்ற உனை
வீம்புடனே சிறப்பு முகாம் என்ற
சித்ரவதைக் கூடத்தில் அடைத்து
சாவு வரை கொண்டு
சென்ற
'மனிதம்' மறந்த
பாரத அரசே!

அகிம்சை அரசென
கூவாதே..
சிறுகச் சிறுக பசியால்
துடித்து
உயிர் துறந்த திலீபனை நீ
ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

தமிழர்களின் தெய்வம்
எங்கள் தாயுமானவரின்
தாயை மருத்துவத்திற்காய்
அனுமதிக்கவில்லை!
இதில் என் மகன்
எம் மாத்திரம்?

அன்றுதான் தெய்வம்
நின்று கொல்லும்
இன்று கண் முன்னே
நடந்துவிடும்.

கண்ணீர் வழிந்தோட
என் மகனின்
பூவுடல் மீது கூறுகின்றேன்
இதற்கு யார் காரணமோ
அனுபவிப்பார்.
தாயின் கண்ணீரின்
வலிமையை
பாரத அரசே!
நீ உணரும்
காலம் விரைவில் வரும்.

என் அன்பு மகனே
உனக்காக உன் வரவிற்காய்
உயிர் சுமந்த வெறும்
கூடு இது.

விரைவில் உன்னிடம்
நான் வருவேன்
தாயும், சேயுமாய் தனி
உலகில் நாம் வாழ்வோம்.
அங்கு எமை யாரும்
பிரிக்க முடியாது.

அபி

பெப்ரவரி 4

# தியாகி திருமலை நடராஜனும் கரிநாளான சுதந்திர தினமும்




**நவீனன்**

இலங்கையின் 76வது சுதந்திர தினம் வடக்கு, கிழக்கில் கறுப்பு நாளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில் 04.02.1957 அன்று திருமலையில் கறுப்புகொடி ஏற்றியவேளை சிங்கள படையால் கொல்லப்பட்ட தியாகி திருமலை நடராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதனையும் நினைவு கூர வேண்டும்.

### பெப்ரவரி 4 - கறுப்பு நாள்:

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதும் 'கறுப்பு தினம்' ஆக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 4 ஆம் திகதி கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தப்படுவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன அறிவித்துள்ளன.

தமிழ் மக்களுக்கான உரிமைகள் மீறப்படுகின்றன. பூர்வீக இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அச்சுறுத்தல்கள் இன்னமும் தொடர்கின்றன. ஆட்சிகளும், ஆட்சியாளர்களும் மாறுகின்றார்கள். எனினும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு என்பதற்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களும் இன்றுவரை முன்னெடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படாமல், அது வெறும் பேசுப்பொருளாக மாத்திரமே இருக்கின்றது. பெப்ரவரி நான்கினை வடக்கு, கிழக்கு தழுவிய கரிநாளாக பிரகடனப் படுத்துகின்றோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளனர்.


அரசாங்கம் பல்வேறு புதிய சட்டங்கள் ஊடாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், நிலங்களை கைப்பற்றி விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகள் என இவை தொடர்கின்றன.

ஆகவே தமிழர்களின் தீர்வு எட்டப்படும் வரை போராடியே ஆகவேண்டும் என்பதே வரலாற்று உண்மை. அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என மாணவர் ஒன்றியம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

### திருமலையில் 04.02.1957 கறுப்புகொடி:

திருகோணமலையில் 1957ம் ஆண்டில் தமிழ் பேசும் மக்கள் பெப்ரவரி 4-ந் திகதி சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுஸ்டிக்க முடிவு செய்தார்கள். அத்துடன் 1957ல் சிறிலங்கா சுதந்திரநாளை






கரிநாளாக தமிழரசுக்கட்சியும் அறிவித்தது.

திருமலையில் 04.02.1957 அன்று கறுப்பு கொடி ஏற்றிய வேளை சிங்கள படையால் நடராஜன் இந்நாளிலேயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

தியாகி நடராஜன் ஆயுதம் தூக்கி போராடவில்லை. ஆனாலும் சுட்டுக் கொல்லப்பட்டார். அகிம்சைப் போராட்டம் வன்முறை மூலம் அடக்கப்பட்டதாலேயே தமிழர்கள் வேறு வழியின்றி ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

பெப் 4-ந் திகதி காலையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் கறுப்புக் கொடிகளைப் பிடித்துக் கொண்டும் கறுப்புச் சின்னங்களை அணிந்துகொண்டும் திருகோணமலை மடத்தடி சந்தியிலிருந்து நகரசபை காரியாலயத்தை நாடி அமைதியுடன் ஊர்வலமாகச் சென்றனர்.

இவ்வூர்வலத்தைத் திருமலை பிரதிநிதி திரு. என்.ஆர். இராஜவரோதயம், ஊர்காவற்றுறை பிரதிநிதி வி.ஏ.கந்தையா, கப்டன் ஏ.ஸி.கனகசிங்கம், டாக்டர் துரைநாயகம் ஆகியோர் முன்னின்று நடத்தினர் என சுதந்திரன் பத்திரிகை 10.02.1957 இல் தகவலை வெளியிட்டது.




04.02.1957 அன்று திருகோணமலையில் சிறிலங்காவின் சுதந்திர நாளுக்கு எதிராகக் கறுப்புக்கொடியேற்றியவேளையில் சிங்களக்கொடூர அரசுப்படையால் சுட்டுக்கொல்லப்பட்ட 22 வயதான தியாகச்செம்மல் நடராஜன்.

அங்கு ஊர்வலம் நகரசபைக் காரியாலயத்தை அடைந்ததும் நகரசபை தலைவர் திரு.த.ஏகாம்பரம் அங்கு ஒரு கறுப்புக் கொடியை ஏற்றி வைத்து உணர்ச்சிகரமாக ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். பின்னர் அங்கு திரளாக சென்று திருமலை மணிக்கூண்டுக் கோபுரத்தின் மீதும் கறுப்புக்கொடி உயர்த்தினார்.

இதைத் தொடர்ந்து திருமலை காளி கோயில் முன்றலில் ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திரு. இராஜவரோதயம் தலைமை தாங்கி பேசினார்.

## தியாகியான திருமலை நடராஜன்:

இந்த நேரத்தில் வெடியோசைகள் கிளம்பின. எங்கேயோ பட்டாசு கொளுத்தப்படுகிறதென்று ஆரம்பத்தில் மக்கள் எண்ணினார்கள். ஆனால் நடராஜன் என்கிற இளைஞரின் மார்பில் குண்டு பாய்ந்ததினால் அவர் பதறிக் கதறிக்கொண்டு அடிசாய்ந்தார்.

துடிக்கத் துடிக்க அவர் உயிர் பிரிந்தது. திரு.வ.நடராஜா என்கிற மற்றொரு இளைஞர் படுகாயப் பட்டார். முதியவர் ஒருவரின் கண்களினூடாக குண்டு பாய்ந்துவிட்டது. இன்னொரு இளைஞருக்கு நெற்றியில் காயம்பட்டது. மற்றும் பலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. சன சமுத்திரம் அல்லோல கல்லோலப்பட்டது. எங்கும் குழப்பம். எங்கும் கலவரம். எங்கும் பயங்கரத் தத்தளிப்பு நிலவியது.

வெளியில் தலைவர்களும், மக்களும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கையில், சிங்களவர்கள் திரண்டு மார்க்கெற் வாயில்களை மறைத்து நிற்க, சிங்களவர் ஒருவர் மார்க்கெற்றுக்குள் மறைந்து நின்று, மார்க்கெற் ஜன்னல் துவாரத்தின் மூலம் இரட்டைக் குழல் துப்பாக்கியினால் குருட்டுவாக்கில் கூட்டத்தை நோக்கி இரண்டு முறை சுட்டிருக்கிறார்.

ரவைகள் நாலாத்திசைகளிலும் பாய்ந்து, தமிழ் மக்களைப் பலிகொண்டன. கொடி காக்கும் பணியில் தியாகி நடராஜன் தன் இன்னுயிரை ஈழ மண்ணுக்காக ஈய்ந்தார்.

## ஒரு மைல் தூர இறுதி ஊர்வலம்:

தியாகி நடராஜனின் புகழுடலை இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலைக் கிளை கையேற்றது. திரு.நடராஜன் புகழுடல் திருமலைத் தமிழரசுக் கட்சியின் காரியாலயத்தில் சகல மரியாதைகளுடனும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

5-ந் திகதி செவ்வாய்க்கிழமை (1957) பிற்பகல் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் சுமார் ஒரு மைல் நீளத்திற்கு இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தெரு நெடுகிலும் பெண்கள் கூடி நின்று கண்ணீர் வடித்தனர்.

திரு. நடராஜனின் புகழுடலை திருமலை நகரசபைத் தலைவர் திரு. த. ஏகாம்பரம், திருவாளர்கள் வி.ஏ. கந்தையா, எம்.பி.என். ஆர்.இராஜவரோதயம், எம்.பி., எம். தாமோதரம்பிள்ளை, சட்டத்தரணி துரைநாயகம், கப்டன், ஏ.ஸி.கனகசிங்கம் ஆகியோர் கையேந்தித் தூக்கிச் சென்றனர்.

கந்தளாய் மயானத்தில் புகழுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. புகழுடலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த கட்டடத்தைக் கட்டி தமிழ் மொழியையும், கொடியையும் காக்க உயிர்நீத்த தியாகி நடராஜன் என்று பொறிக்க வேண்டும் என்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டதனாலேயே தகனம் செய்யப்படாமல் உடல் அடக்கம் செய்யப்பட்டது என சுதந்திரன் பத்திரிகை இத் தகவலை வெளியிட்டது.


திருப்பூர் குமரனை நிகர் பரம்பரையிலே
திருமலை தந்த தியாகி நடராஜன்
துப்பாக்கிக்குண்டுக்கு விழியைப் பலியாக்கி மொழியைக் காக்க முன்வந்த முடிவு
ஒரு மைல் நீளத்தில் ஊர்வலம்
நடராஜனின் பிரேதப் பெட்டியைப் பிரமுகர்கள் கையேந்தித் தூக்கினர்

# யாழில் கட்டப்பட்ட சொகுசுக் கப்பல்



த.கிருஷ்ணா





காரைநகர் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட அதிசொகுசு சுற்றுலா கப்பல்.

காரைநகர் உள்ள Mahasen Marine என்ற கப்பல் கட்டும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ஓர் அதிசொகுசு சுற்றுலா கப்பல் இது ஆகும்.

இது பர்மா நாட்டுக்கு வழங்க உள்ள சுற்றுலாஅதி சொகுசுக் கப்பல் ஆகும். இதனைத் தயாரித்த பின், பரீட்சார்த்த பயணம் காரைநகர் துறைமுகத்திலிருந்து 19.02.2024 அன்றைய தினம் வெற்றிகரமாக முடிந்தது.

இந்தக் கப்பல் சூரிய மின்சக்தி வசதியைக் கொண்ட சொகுசு கப்பல் என்பதும் குறிப்பிடத்தக்கது.இலங்கையில், குறிப் பாக வடக்கில் யாழ்ப்பாணம் காரைநகரில் இவ்வாறான ஒரு தொழிற்சாலை உண்டு என்பது எமக்குப் பெருமை.

கடலை ஆண்ட தமிழர்கள் நாம். கப்பலோட்டிய தமிழன் என்ற பெருமையும், கடல் கடந்து ‘கடாரம் வென்ற தமிழன்..’ என்றெல்லாம் முன்னர் கூறுவோம்.வங்கக் கடலை கட்டுப் படுத்தி கட்டுபாட்டில் வைத்திருந்த பொற்காலமும் உண்டு.

தற்போதும் தமிழர் ஒருவரின் முயற்சி . உலகில் எங்கோ ஓர் இடத்தில் இவ்வாறான கப்பல்கள் தமிழரின் பெருமையை கூறட்டும்.



ஐங்கரன் விக்னேஸ்வரா

## உலக வானொலி தினம்:

# வன்னி போர்க்கள தவபாலனின் இறுதிக் குரல்

உலக வானொலி தினத்தை நினைவூட்டி மகிழும் இன்றைய பெப்ரவரி 13 நாளில், வன்னி மண்ணில் இறுதி வரை ஒலித்த, காற்றோடு கலந்த தி.தவபாலன் குரலை எவரும் இலகுவில் மறந்து விடமுடியாது.

உலக வானொலி தினம் (World Radio Day) பெப்ரவரி 13 ஆம் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்நாளை ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (யுனெஸ்கோ) 2011 நவம்பர் 3 ஆம் நாள் உலக வானொலி நாளாக அறிவித்தது. வானொலி ஒலிபரப்புச் சேவையைக் கொண்டாடவும், பன்னாட்டு வானொலியாளர்களுக்கு இடையே கூட்டுறவை ஏற்படுத்தவும், வானொலிகள் மூலமாக



தகவல்கள் பரிமாற ஊக்குவிக்கவும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

### ஓர்மத்துடன் உறுமிய குரல்:

ஓர்மத்துடன் உறுமிய ஈழப் போராட்டக் குரலாக விளங்கிய தி.தவபாலன் வானலைகளில் ஆற்றிய பங்கினை இந்நாளில் நினைவு கூர்வது பொருத்தமானதாகும்.

வன்னிப் போரின் இறுதியில் பணியாற்றிய ஊடகர்களின் அசாத்திய திறமைகளை தாண்டி, தவபாலன் ஆற்றிய பணியினை முதன்மைப்படுத்தி மேற்கொள்ளும் அளவிற்கு அவரது சிறப்பு முக்கியம் பெறுகின்றது. போர்க் கால வன்னியில் அதிகப்படியான இடங்களில் வானொலியை பயன்படுத்திதான் மக்கள் தகவல்களை அறிந்து கொண்டனர். ஈழத்தில் செய்தித் தாள்களுக்குப் பிறகு மக்களை இசை மற்றும் செய்திகளால் ஒன்றிணைத்தது வானொலிதான். இன்னும்



பலரது மனதை கொள்ளை கொள்வது வானொலி என்றால் அதனை மறுக்க முடியாது. 1990 களில் ஈழத்தில் மின்சாரம் கூட இல்லாத இடங்களில் நேயர்களை அரவணைத்துச் செல்லும் வானொலிக்கான சிறப்பை உணர்த்தும் உலக வானொலி தினம் இன்றாகும்.

தலைமுறைகளைக் கடந்து மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்து பொக்கிஷமாக வானொலி திகழ்கிறது. அலைவரிசை தொடங்கப்பட்ட நாளான இன்று உலக வானொலி நாளாக கொண்டாடப் படுகிறது. இந்த 21ம் நூற்றாண்டில் உலகமே நம் கைக்குள் வந்துவிட்டது. நாம் விரும்பிய செய்தி அல்லது மனநிலைக்கு ஏற்றப் பாடல்களை சில வினாடிகளில் கேட்டு விடுகிறோம்.

ஆயினும் உலகின் போர்கள் ஒவ்வொன்றின் பின்னாலும் பல்வேறு அசாத்திய திறமையான பதிவுகள் வெளிவரத் தவறுவதில்லை. தமிழர்களின் விடுதலைப் போராட்டக் களத்துடன் சேர்ந்து பயணித்து வீழ்ந்த அல்லது காணமல் போன ஊடகர்கள் பட்டியலில் குறிப்பிடத் தக்கவர்களில் ஒருவராக தி.தவபாலன் விளங்குகின்றார்.

தி.தவபாலன் (இறைவன்) போர்க்காலத்தில் வன்னியில் வாழ்ந்தவர்கள் அனைவருக்கும் தெரிந்தவர். அதேபோல வன்னிக்கு வெளியிலும் உறுமும் வானொலியைக் கேட்டவர்கள் அனைவருக்கும் தெரிந்தவர். செய்திவீச்சு, நாளிதழ், நாள் நிகழ்ச்சிகளாலும் நன்கு அறியப்பட்டவர். அவர் போர்க்கால ஊடகவியலாளராக அறியப்பட்டாலும் அவர் வன்னியின் குரலாக, தனித்துவமானவராகப் பார்க்கப்படுகிறார்.

உண்மையில் செய்தி என்பதைத் தாண்டி அறிவியலில் மிகச்சிறந்த மதிநுட்பம் மிகுந்தவராகவே அவர் விளங்கினார். விண்வெளி சார்ந்த அறிவியல் தேடலில் மிகுந்த ஆர்வம் மிக்கவராக விளங்கினார்.

புகழ்பெற்ற எழுத்தாளரும் கண்டுபிடிப்பாளருமான ஆர்தர் சி. கிளார்க்குடன் கடிதம் மூலம் தொடர்பிலிருந்தார். பதின்ம வயதிலிருந்தே ஆதர் சி. கிளார்க்குடன் அவருடைய உறவு நிலை இருந்தது.

ஒரு விடயம் சார்ந்து தேடுகின்ற போது, அதனை மேலோட்டமாகப் பார்ப்பது போலவே அவருடைய நடவடிக்கை இருக்கும். ஆனால் மிக ஆழமான மற்றும் மிகத் துரிதமான வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருந்தார். ஒரு விடயம் சார்ந்து பேசுகின்றபோது அது பற்றிய நிறைந்த தேடல் அவரிடம் இருந்தது.

ஈழ விடுதலைப் போராட்டம் 2009 மேயில் மௌனிக்கப்பட்டவுடன் போராட்டத்தின் பின்னான சொல்லப்படாத பல செய்திகள் வரலாற்றில் இருந்து மறைந்துவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் பெருமளவில் ஏற்பட்டே வருகின்றன. ஆயினும் காலவோட்டத்தில் உண்மைகள் அழியா வண்ணம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## ஆவணக் காப்பக செயற்பாட்டாளர்:

இத்தகைய ஆவணக் காப்பக (Documentation unit) செயற்பாட்டாளர்களின் முன்னோடியாக தவபாலன் விளங்கினார். கோரமான போர்க்காலத்திலேயே போர் சார்ந்த ஏராளம் ஒளிப்படங்கள் மட்டுமல்ல இயற்கை காட்சிகளையும் மிகுந்த கலை இரசனையோடு வெளிப்படுத்தினார் அவர். அந்த வல்லமை தி. தவபாலனிடம் இருந்தது.

குறிப்பாக முட்கம்பி வேலிக்குள்ளால் யாழ். நூலகம், முட்கம்பி வேலிக்குள் சிறுவன் ஒருவர் வெளியே பார்க்கும் படம் பலருக்கு இன்னமும் நினைவிருக்கலாம். இவ்வாறு ஏராளம் புகைப்படங்களை தி.தவபாலன் பதிவாக்கியிருந்தார்.

அத்துடன் ஈழ புகைப்படக் கலைஞர்களில் முதன் முதலில் தனிநபராக இணையத்தளம் வைத்திருந்தவர் தவபாலன் தான். ஈழவிசன் என்கிற பெயரில் அந்த இணையம் செயற்பட்டதும் பலர் அறிவர்.

நீண்ட காலமாக வன்னியின் வானோசையாக ஒலித்த குரல் 2009ஆம்ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் தொடர்ந்தும் ஒலிபரப்பினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. ஒலிவாங்கியின் ஊடாக துப்பாக்கி வேட்டொலிச் சத்தங்கள் வானொலிகளில் கேட்கின்றன. துப்பாக்கிச் சன்னங்கள் ஒலிபரப்பு சாதனங்களைத் துளையிடுகின்றன.

தொடர்ந்தும் பணிசெய்யமுடியாத நெருக்கடியில் வானொலிச் சாதனங்கள் ஆவணங்கள் அனைத்தும் தீ மூட்டி அழிக்கப்பட்டதுடன் வன்னியின் வானோலிக் குரல் முற்றுப் பெறுகிறது.

வன்னியில் இறுதிக்கட்ட போரில் மக்களுக்கான குரலாக விளங்கிய வானொலியின் இறுதிக்கணம் வரையில் உழைத்து, களத்தில்

இறுதிவரை பணியாற்றிய தி.தவபாலனும் (இறைவன்) இறுதி நாட்களில் காணாமல் போனார்கள் என்பதே இறுதியான தகவலாகும்.



# பீனிக்ஸ் பெண்ணே!!



பெண்ணே.!
உன்னை
பூவாக நினைத்தவர்களையும்
புயலாய்
திரும்பிப் பார்க்கின்றாய்!

சாம்பலாய் நினைத்தால்..
பீனிக்ஸ்சாய் பறக்கின்றாய்.
உன்
கண்களையும்
கூந்தலையும்
வர்ணித்த கவிதைகள் கூட
உன் திறமைகளை
தோண்ட
ஆரம்பித்து விட்டன!

நீ
வேண்டாம் என்று
பிறந்தவளா..? இல்லை..
வேண்டி வேண்டிப் பிறந்தவள்!

அறிவியலும் கூட
உன் அறிவை
ஆராய்ந்து கொண்டிருக்கிறது.


விண்வெளியிலும்
உன் ஓட்டம்..
தட்டிக் கொடுத்துக் கொள்
உன்னை நீயே!

பெண்ணே!
நீ ஒரு புயல்.
பூகம்பம்.
எரிமலை.

நீ
பெண்ணாக
பிறப்பதற்கு

பெருந்தவம்
செய்திட வேண்டும்!!

அன்புடன் முல்லை பாஸ்கர்



# யாழ்ப்பாணம் ஆர். முத்தையா

தமிழ் தட்டச்சுப் பொறியையும், தமிழில் தட்டச்சு செய்வதற்கான தொழில் நுட்பங்களையும் உருவாக்கிய யாழ்ப்பாணம் ஆர்.முத்தையா அகவை நாள் 24.02.2024.

**தமிழர்கள் வரலாற்றில் ஒரு முக்கியமான நாள் 24.2.1886**

## அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

★ இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள சுண்டிக்குளியில் (1886) பிறந்தார். இவரது தந்தை ராமலிங்கம், ஆறுமுக நாவலரின் சீடர்களில் ஒருவர். 7 வயதில் தந்தையையும், அதற்குப் பிறகு ஒருசில ஆண்டுகளில் தாயையும் இழந்தார்.

★ உறவினர்களின் ஆதரவுடன் கலாசாலையில் பயின்றார். 21 வயதில் மலேசியா, சிங்கப்பூர் இணைந்த பகுதியான மலாயாவுக்கு சென்றார். அங்கு ரயில்வேயில் வேலை கிடைத்தது. சிறிது காலம் பணியாற்றியவர், பிரபல வணிக நிறுவனத்தில் சேர்ந்தார்.

★ அங்கு 1930 வரை பணிபுரிந்தார். இந்த காலக்கட்டத்தில் கணக்குப் பதிவு, பொருளாதாரம், அச்சடித்தல், சுருக்கெழுத்து ஆகியவற்றை கற்றார். 1913-ல் ஸ்லோன் டுப்ளோயன் சர்வதேச சுருக்கெழுத்துப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

★ தமிழ், ஆங்கில இலக்கியங்கள், கைத்தொழில் நூல்கள், சமய நூல்களைக் கற்றார். ஆங்கிலத்தில் இருப்பதுபோல தமிழில் தட்டச்சு இயந்திரம் இருந்தால் நன்றாக இருக்குமே என்று கருதினார். அதை உருவாக்கும் முயற்சியில் இறங்கினார்.

★ தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் 4 வரிசைகளில் 46 விசைகளுக்குள் அடக்குவது சவாலாக இருந்தது. எனவே, பல எழுத்துகளுக்குப் பொதுவாக உள்ள குறியீடுகளை தனித்தனி விசைகளில் அமைத்தார். இரண்டு விசைகளை அழுத்திய பிறகே அச்சு நகர வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு 'நகரா விசை' என்ற தொழில் நுட்பத்தை பயன்படுத்தினார்.

★ சிறந்த, எளிய உத்திகள் மூலமாக சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, தமிழ் தட்டச்சு இயந்திரத்தை உருவாக்கினார். அதற்கு 'ஸ்டாண்டர்டு தட்டச்சு' என பெயரிட்டார். ஆங்கிலத்தைவிட ஏறக்குறைய 10 மடங்கு அதிக எழுத்துகள் கொண்ட தமிழ் மொழியை, தட்டச்சு இயந்திரத்துக்குள் அடக்கி, தமிழுக்கென பிரத்யேக தட்டச்சு இயந்திரத்தை உருவாக்கியவர் என்ற பெருமையைப் பெற்றார்.

★ விசைப்பலகையை உருவாக்கும் பணியை ஜெர்மன் நிறுவனத்திடம் ஒப்படைத்தார். பெரும் எண்ணிக்கையில் இறக்குமதி செய்து விற்பனை செய்தார். தட்டச்சு இயந்திரத்தில் சில குறைபாடுகள் இருப்பதைக் கண்டறிந்து அவற்றை சரிசெய்து, மேம்படுத்தினார்.

★ 'பிஜோ', 'ஐடியல்' ஆகிய போர்ட்டபிள் தட்டச்சு இயந்திரங்களை உருவாக்கினார். இதை பின்பற்றி பல தட்டச்சு இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, பல மொழியினரும் தத்தம் மொழிகளில் தட்டச்சு சாதனங்களைத் தயாரிக்கத் தொடங்கினர்.



★ இரு கைகளின் விரல்களுக்கும் சமமான வேலை இருந்தால்தான் தட்டச்சு செய்வது எளிதாக இருக்கும். இதை கவனத்தில் கொண்டு, அதற்கேற்ப எழுத்துகளை சற்று இடம் மாற்றியமைத்தார். ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, தட்டச்சு தொழில்நுட்பத்தை மேம்படுத்தினார். இவர், சிறந்த சமூக சேவகரும்கூட. குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார்.

★ தட்டச்சு இயந்திரங்கள் வழக்கொழிந்தாலும், கணினி வடிவில் தமிழ் தட்டச்சு விசைப் பலகையை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் இன்னும் பயன்படுத்தி வருகின்றனர். 'தமிழ் தட்டச்சு இயந்திரத்தின் தந்தை' என போற்றப்படும் ஆர்.முத்தையா இலங்கை வகுப்புக் கலவரங்கள் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதினார். அந்த நூல் வெளிவருவதற்கு முன்பே காலமாகிவிட்டார்.

**நன்றி: தி இந்து நாளிதழ்**



# படிப்பினை

ஜெர்மனிக்கு சுற்றுலா சென்ற இரண்டு இந்தியர்கள் ஒரு உணவகத்தில் சாப்பிட்டு முடித்து எழுந்தார்கள்... இவர்கள் தட்டுகளில் கால்பகுதிக்குமேல் உணவு சாப்பிடப்படாமல் அப்படியே விடப்பட்டிருந்தது. இருவரும் பில் தொகையை உணவு பறிமாறியவரிடம் செலுத்த முயன்றனர்.

அவர்களின் பக்கத்து மேஜையில் சாப்பிட்டு கொண்டிருந்த இரு மூதாட்டிகள், உணவக உரிமையாளரிடம் இவர்களை அழைத்துச் சென்று...

சாப்பிடாமல் உணவை விரயம் செய்து விட்டுச் செல்வதற்கு தங்கள் அதிருப்தியையும், எதிர்ப்பையும், வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார்கள்...

அந்த கடை உரிமையாளர், ‘‘ஏன் உணவை இப்படி விரயம் செய்தீர்கள்?’’ என்று மென்மையாக கேட்டார்.

உடனே அவர்கள், ‘‘நாங்கள் ஆர்டர் செய்ததற்கு கட்டணத்தை செலுத்திவிட்டோம், அதுபற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? அது எங்கள் உரிமை...’’ என்று பேசியிருக்கிறார்.

அந்த வயதான மூதாட்டிகளுக்குக் கோபம் வந்து, உடனே யாருக்கோ தொலைபேசியில் பேசினார்கள்.



சில மணித்துளிகளில் சீருடையில் வந்த அதிகாரி கடுமையான குரலில், ‘‘எப்போதும் உங்கள் தேவைக்கேற்ப ஆர்டர் செய்யுங்கள்... பணம் உங்களுடையதாக இருக்கலாம். ஆனால் அந்த உணவுப் பண்டங்கள் இந்த நாட்டின் விவசாயின் உழைப்பு தேசியச் சொத்து...

உலகம் பல பற்றாக்குறைகளைக் காணும் இக்காலகட்டத்தில், இப்படி உணவுகளை விரயம் செய்வது பகுத்தறிவுக்கு முரண் அல்லவா? எனவே இனி எங்கும் இப்படிச் செய்யாதீர்கள்’’என்று அறிவுறுத்திவிட்டு ரூ.3300 (இந்தியப் பெறுமதியில்) பணம் அபராதம் விதித்திருக்கிறார்.

நம்மவர்கள் அபராதம் செலுத்திவிட்டு, மன்னிப்பு கேட்டிருக்கின்றனர்.

நண்பர்களே! ஜெர்மன் அதிகாரி சொன்னது, உணவை விரயம் செய்கிற அனைவருக்கும் பொருந்தும்.

**‘பணம் நம்முடையதாக இருக்கலாம் ஆனால் உணவு நாட்டின் சொத்து, விவசாயின் உழைப்பு’** என்ற கருத்து நம் இல்லங்கள் தோறும் இருக்க வேண்டும்...



# கணனி சார்ந்த பொது அறிவு

தற்போது இன்டர்நெட் பயன்பாடு என்பது மிகவும் பிரபலம் ஆகிவிட்ட விஷயமாகும். இன்டர்நெட் பயன்படுத்துவர் சிலர் கணனி சார்ந்த பொதுவான தகவலை இன்னுமும் தெரியாமல் தான் உள்ளனர்.

கணனி பற்றிய பொது அறிவை இதோ தெரிந்து கொள்ளுங்கள்......

★ இன்டர்நெட்டின் தந்தை என்று அழைக்கப்படுபவர் - வின்ட் ஸர்ப்

★ www (World wide web) என்னும் இன்டர்நெட் தாரக மந்திரத்தை உருவாக்கியவர் - திமோத்திஜான் பெர்னர்ஸ்லீ. இதன் துவக்க பெயர் Enquire.

★ கணனி வழி தகவல் பரிமாற்றத்தில் புன்னகை தவழும் முகம் என்பதை குறிக்க :- எனும் கூறியீடு பயன்படுத்தப்படுகிறது. இதை முதன் முதலாக 1982ல் பயன்படுத்தத் துவங்கியவர் - ஸ்காட் பால்மன்

★ கூகுள் தேடுபொறியை உருவாக்கியவர்கள் - லாரிபேஜ், ஸ்சேர்கி பிரின்

★ விக்கிபீடியா வலைதளத்தை உருவாக்கியவர் - ஜிம்மி வேல்ஸ்

★ பேஜ்மேக்கர் எனும் பப்ளிஷிங் சாப்வேரை உருவாக்கியவர் - பால் பிரெயினார்ட், இவர் இந்தியாவின் சூப்பர் கம்ப்யூட்டர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

★ சி++ எனும் கணனி மொழியை வடிவமைத்தவர் - பியான் ஸ்ட்ரூ ஸ்டெரெப்

★ MS&Dos எனப்படும் கணனி நிரலை உருவாக்கியவர் - டிப் பாட்டர்ஸன்

★ ஆப்பிள் கணனியை துவக்கியவர் - ஸ்டீவ் வோஸ்னியாக்

★ CD என்ற குறுந்தகடை கண்டுபிடித்தவர் - ஜேம்ஸ் ரஸ்ஸல்

★ Vital Information Resources Under Seas எனும் கணனி வார்த்தையின் சுருக்கம் தான் VIRUS.

★ Commonly operated machine purposely used for trade and Engineering research என்பதன் சுருக்கம் தான் COMPUTER.

★ கணனி மவுஸை கண்டுபிடித்தவர் - டக்ளஸ் எங்கல் பர்ட்

★ Uniform Resource Location என்பதன் சுருக்கம் தான் URL முகவரியாகும்.







# மனதைத் தொட்ட உண்மைச் சம்பவம்

# கலெக்டர் ஏன் மேக்கப் போடவில்லை...?

கேரள மாநிலம், மலப்புரம் மாவட்ட ஆட்சியர் ஸ்ரீமதி ராணி சோயாமோய் கல்லூரி மாணவர்களுடன் உரையாடுகிறார். அவர் கைக்கடிகாரத்தைத் தவிர வேறு எந்த நகையும் அணியவில்லை.

பெரும்பாலான குழந்தைகளை ஆச்சர்யப்படுத்திய விஷயம் என்னவென்றால், அவர் முகத்தில் பவுடர் கூட பயன்படுத்தவில்லை. அவர் பேச்சு ஆங்கிலத்தில் இருந்தது. அவர் ஓரிரு நிமிடங்கள் மட்டுமே பேசினார். ஆனால், அவருடைய வார்த்தைகள் உறுதியுடன் இருந்தன.அப்போது மாணவிகள் கலெக்டரிடம் சில கேள்விகளை கேட்டனர்.

**கேள்வி : உங்கள் பெயர் என்ன?**

**பதில்:** என் பெயர் ராணி. சோயாமோய் என்பது எனது குடும்பப் பெயர். நான் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவள்.வேறு ஏதாவது கேட்க வேண்டுமா?

ஒரு ஒல்லியான பெண் எழுந்து நின்றாள்.

கேளம்மா...

''மேடம் ஏன் உங்கள் முகத்துக்கு மேக்கப் போடவில்லை...?''

கலெக்டரின் முகம் சட்டென்று வெளிறியது.நெற்றியில் வியர்வை வழிந்தது. அவர் முகத்தில் புன்னகை மறைந்தது. பார்வையாளர்கள் திடீரென அமைதியானார்கள். அவர் மேஜை மேல் இருந்த தண்ணீர் பாட்டிலை திறந்து கொஞ்சம் குடித்தார். பிறகு மாணவியைப் பார்த்து உட்காருமாறு சைகை செய்தார் பிறகு மெதுவாக பேச ஆரம்பித்தார்.

இந்த மாணவி குழப்பமான கேள்வியைக் கேட்டுவிட்டாள் இது ஓரிரு வார்த்தையில் பதில் சொல்ல முடியாத கேள்வி. அதற்கான பதில் என் வாழ்க்கைச் சம்பவத்தை சொல்ல வேண்டும்.

என்னுடைய கதைக்காக உங்கள் பொன்னான பத்து நிமிடங்களை ஒதுக்க நீங்கள் தயாரா...? நான் ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடியினர் பகுதியில் பிறந்தேன்...

கலெக்டர் சற்று நிதானித்து பார்வையாளர்களை பார்த்தார். 'மைக்கா' சுரங்கங்கள் நிறைந்த கோடெர்மா மாவட்டத்தின் பழங்குடியினர் பகுதியில் ஒரு சிறிய குடிசையில் பிறந்தேன்.என் அப்பாவும் அம்மாவும் சுரங்கத் தொழிலாளர்கள். எனக்கு மேலே இரண்டு சகோதரர்களும் கீழே ஒரு சகோதரியும் இருந்தனர். மழை பெய்தால் ஒழுகும் ஒரு சிறிய குடிசையில் நாங்கள் வாழ்ந்தோம்.

வேறு வேலை கிடைக்காததால் எனது பெற்றோர் குறைந்த கூலிக்கு சுரங்கத்தில் வேலை செய்தனர். அது மிகவும் கடினமான வேலை.

எனக்கு நான்கு வயதாக இருக்கும் போது, என் அப்பா, அம்மா மற்றும் இரண்டு சகோதரர்கள் பல்வேறு நோய்களால் படுத்த படுக்கையாகி விட்டனர்.

சுரங்கங்களில் உள்ள கொடிய மைக்கா தூசியை சுவாசிப்பதால் இந்த நோய் ஏற்படுகிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது.எனக்கு ஐந்து வயதாக இருந்தபோது, என் சகோதரர்கள் நோயால் இறந்துவிட்டனர்.

ஒரு சிறு பெருமூச்சுடன் கலெக்டர் பேச்சை நிறுத்திவிட்டு கண்ணீரை துடைத்துக் கொண்டே....

பெரும்பாலான நாட்களில் எங்கள் உணவில் தண்ணீர் மற்றும் ஒன்று அல்லது இரண்டு ரொட்டிகள் மட்டுமே இருந்தன. பின்னர்எனது சகோதரர்கள் இருவரும் கடுமையான நோய் மற்றும் பட்டினியால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டனர். எங்கள் கிராமத்தில் மருத்துவரிடம் செல்பவர்கள், பள்ளிக்கூடம் செல்பவர்கள் என யாரும் இல்லை.

காரணம், பள்ளிக்கூடம், மருத்துவமனை, கழிவறை, மின்சாரம் என எதுவுமே கூட இல்லாத ஒரு கிராமத்தை உங்களால் கற்பனை செய்ய முடியுமா...? அங்கு தான் நாங்கள் வாழ்ந்தோம்.ஒரு நாள் நான் பசியுடன் இருந்தபோது, என் தந்தை என்னை, இரும்புத் தகடுகளால் மூடப்பட்ட ஒரு பெரிய சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றார்.



அது புகழ் பெற்ற 'மைக்கா சுரங்கம்'.அது ஒரு பழங்கால சுரங்கம். கீழே உள்ள சிறிய குகைகள் வழியாக ஊர்ந்து சென்று மைக்கா தாதுக்களை சேகரிப்பது எனது வேலை. என்னைப் போன்ற பத்து வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே இது சாத்தியமாக இருந்தது. என் வாழ்நாளில் முதல்முறையாக ரொட்டி சாப்பிட்டு வயிறு நிரம்பினேன்.

நான் ஒன்றாம் வகுப்பு படிக்கும் போது நான் விஷ தூசியை சுவாசிக்கக்கூடிய இருட்டு அறைகளில் மைக்காவை முகர்ந்து கொண்டிருந்தேன்.எதிர்பாராத விதமாக குழந்தைகள் அவ்வப்போது நிலச்சரிவுகளில் இறப்பது வழக்கமாக இருந்தது. எப்போதாவது சிலர் ஆபத்தான நோய்களாலும் இறப்பார்கள்.

ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் உழைத்தால் ஒரு ரொட்டியாவது கிடைக்கும். பசி மற்றும் பட்டினியால் நான் ஒவ்வொரு நாளும் மெலிந்து நீரிழப்புடன் இருந்தேன். ஒரு வருடம் கழித்து என் சகோதரியும் சுரங்கத்தில் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள்.

கொஞ்சம் நல்லா வந்தவுடனே அப்பா, அம்மா, அக்கா மூவரும் சேர்ந்து உழைத்து பசியில்லாமல் வாழலாம் என்ற நிலைக்கு வந்தோம்.ஆனால் விதி வேறொரு வடிவில் எங்களை ஆட்கொள்ளத் தொடங்கியது.

ஒரு நாள் நான் கடும் காய்ச்சலால் வேலைக்குப் போகாமல் இருந்த போது திடீரென மழை பெய்தது. சுரங்கத்தின் அடிவாரத்தில் தொழிலாளர்கள் கண்ணெதிரே சுரங்கம் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தனர்.

அவர்களில் என் அப்பா, அம்மா மற்றும் சகோதரிகளும் கூட இறந்து போயினர்.அனைவரின் கண்களிலும் கண்ணீர் வழியத் தொடங்கியது.

பார்வையாளர்கள் அனைவரும் மூச்சு விடக்கூட மறந்தனர். பலரது கண்களும் கண்ணீரால் நிரம்பி வழிந்தன.

எனக்கு ஆறு வயதுதான் ஆகியிருந்தது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.இறுதியில் அரசு அகத்தி மந்திர் வந்தடைந்தேன். அங்குதான் நான் படித்தேன். என் கிராமத்தில் இருந்து முதலில் எழுதப் படிக்க கற்றுக் கொண்ட முதல் பெண் நான்.

இறுதியாக இதோ இப்போது உங்கள் முன் கலெக்டராக நிற்கிறேன்..

இதற்கும் நான் மேக்கப் பயன்படுத்தாததற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் நினைக்கலாம்...!

பார்வையாளர்களைப் பார்த்துக் கொண்டே அவர் தொடர்ந்தார்.

அந்த நாட்களில் இருளில் சுரங்கங்களில் ஊர்ந்து, தவழ்ந்து நான் சேகரித்த....மைக்கா முழுவதையும் ஒப்பனை பொருட்களில் பயன்படுத்துவதை அப்போதுதான் உணர்ந்தேன்.



மைக்கா என்பது ஃப்ளோரசன்ட் சிலிக்கேட் கனிமத்தின் முதல் வகை.

பல பெரிய அழகுசாதன நிறுவனங்கள் வழங்கும் மினரல் மேக்கப்களில், 20,000 இளம் குழந்தைகளின் உயிரைப் பணயம் வைத்து சேகரித்த மைக்கா தாது உள்ளது.

உங்கள் சருமத்தை ஒளிரச் செய்யும் பல வண்ண மைக்காக்கள் மிகவும் வண்ணமயமானவை. இவற்றை பயன்படுத்தும்போது ரோஜாவின் மென்மை உங்கள் கன்னங்களில் பரவுகிறது.இந்த அழகு சாதனப் பொருட்களில்,அவற்றை எடுப்பதற்காக போன குழந்தைகளின் எரிந்த கனவுகள், அவர்களின் சிதைந்த வாழ்க்கை, மற்றும் பாறைகளுக்கு இடையில் நசுக்கப்பட்ட அவர்களின் சதை மற்றும்ரத்தம் என்பன கலந்திருக்கின்றன.

மில்லியன் கணக்கான டாலர்கள் மதிப்புள்ள மைக்கா இன்னும் சுரங்கங்களில் இருந்து குழந்தைகளின் கைகளால் எடுக்கப்படுகிறது....

அவை நம் அழகை ஆராதித்து கொண்டு இருக்கின்றன..

இப்போது நீங்கள் சொல்லுங்கள்...

நான் முகத்தில் எப்படி மேக்கப் போடுவது.?

பட்டினியால் இறந்த என் சகோதரர்களின் நினைவாக நான் எப்படி வயிறு நிரம்ப சாப்பிட முடியும்?

எப்பொழுதும் கிழிந்த ஆடைகளை அணிந்திருக்கும் என் அம்மாவின் நினைவாக நான் எப்படி விலை உயர்ந்த பட்டு ஆடைகளை அணிய முடியும்...?

மேலும் எதையும் பேசமுடியாமல்... தலையை நிமிர்த்தி...

சிறு புன்னகையுடன் அவர் அரங்கை விட்டு வெளியே சென்றபோது...

பார்வையாளர்கள் அனைவரும் அறியாமல் எழுந்து நின்றனர். அவர்கள் முகத்தில் இருந்த மேக்கப் அவர்கள் கண்களில் இருந்து வழியும் சூடான கண்ணீரில் கரைத்துக் கொண்டிருந்தன.

ஃபேஸ் பவுடர், க்ரீம், லிப்ஸ்டிக் நிறைந்த பெண்களைப் பார்த்து சிலர் வெறுப்படைந்தால் அவர்களைக் குறை சொல்லாதீர்கள்.

அதிக தரமான மைக்கா இன்றும் ஜார்க்கண்டில் வெட்டப்படுகிறது.20,000க்கும் மேற்பட்ட சிறு குழந்தைகள் இப்போதும் பள்ளிக்குச் செல்லாமல் அங்கு வேலை செய்கின்றனர்.

சிலர் நிலச்சரிவாலும் சிலர் நோயாலும் புதையுண்டு இறந்து கொண்டிருக்கிறார்கள்.

**இது மலையாளத்தில்
இருந்து மொழிபெயர்க்கப்பட்ட
ஒரு உண்மைச் சம்பவம்.**

# வணல்

## கொற்றவை

**அங்கம்: 17**

வெண்ணிலா தனது கவலைகளையெல்லாம் மறந்து வெங்கி குடும்பத்தினருடன் கலகலப்பாக இருந்தது ஆனந்தனுக்கு ஒருவித நிம்மதியைத் தந்தது. வெங்கியின் பையன்கள் நன்கு பழகுபவர்களாகவும் மரியாதை தெரிந்தவர்களாகவும் இருந்தார்கள். ஒரிரு வருடங்கள் வெண்ணிலாவை விடவும் இளையவர்களாக இருக்கக் கூடும். 'அக்கா! அக்கா!' என்று அவளுடன் உரிமையாகப் பழகியது ஆனந்தனுக்குப் பிடித்திருந்தது. அவனைக் கண்டவுடனேயே 'அண்ணா! தேத்தண்ணி குடியுங்கோ!'என்று தேநீருடன் வந்தாள் காவேரி. நீண்டநாள் இந்த வீட்டிலேயே இருந்ததுபோல அவள் பழகியது ஆச்சரியம்தான்.



சாந்தியைப் பார்ப்பதற்காக புறப்பட்ட ஆனந்தனுடன் வெங்கியும் இணைந்து கொண்டது பெரிய விடயமல்ல. 'போய் வாருங்கோ பெரியப்பா..'என்று அவனின் பிள்ளைகள் அவனை வழியனுப்பி வைத்ததுதான் அவனை அதிர்ச்சியடையச் செய்தது. 'என்னடா இது..?' என்பதுபோல வெங்கியைப் பார்த்தான் அவன்.

'சொல்லுறன் இரு!'என்பதுபோல தலையசைத்தான் வெங்கி. கொஞ்ச தூரம் போகும்வரைக்கும் இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

''எனக்கு கல்யாணம் பண்ண விருப்பமில்லை என்று உனக்குத் தெரியுந்தானே மச்சான்..?'' ஆனந்தன் தலையசைத்தான்.

இப்ப மனம் மாறீட்டாய் எண்டு நினைச்சன்..

''இல்லை எனக்கு நாட்டமில்லை மச்சான் போதாத துக்கு கால் வேற போயித்து ஏன் நாம அடுத்தளுக்கு பாரமாக இரிக்கோணும்..? ..சொல்லு.?''

ஆனந்தனுக்கு எதுவும் புரியவில்லை.

''ஐயா போனதுக்குப் பிறவு அம்மாவும் போய்ச் சேர்ந்திட்டாங்க.... நான் தனியன் ஆகீட்டன்.... வயலுக்கு போய் அங்க சிலநாள் இரிப்பன்.... மறுகா வீட்டில சில நாள்... எனக்கு வயலில இறங்கி ஓடியாட முடியேல்லை... எல்லாத்தையும் குத்தகைக்கு விட்டிட்டன்...'' ஒரு பெரு மூச்சுடன் தொடர்ந்தான் வெங்கி.

''எல்லாளன் எண்ட ஒரு சித்தாண்டிப் பெடியன் காவேரியைக் கல்யாணம் கட்டியிருந்தான்... காவேரிக்கு யாரும் இல்லை... கிளிநொச்சியில ஒரு ஆசிரமத்தில வளர்ந்த வளாம். கலியாணம் கட்டி தரவைப் பக்கத்தில இருந்திருக்கினம். பெடியனை எனக்குத் தெரியும். அருமையான சண்டைக்காரன். கையில ஒரு சின்னக் குழந்தையும் வயித்தில ஒண்டுமா இருக்கறப்போ வெருகல் பக்கம் நடந்த சண்டையில அவன் போய்ச் சேர்ந்திட்டான்....''

''எல்லாளன்டை பக்கம் உறவுக்கார ஆக்கள் எண்டும் பெரிசா ஒருத்தருமில்லை. ஒன்று ரெண்டு வயசு போன வங்கதான் இருக்காங்க. பெட்டைக்கும் யாருமில்லை எண்டு தெரிஞ்சவுடனை அவங்களும் ஒதுங்கீட்டாங்க. ஒருத்தரும் சேர்க்கேல்லை. பெட்டை தனிச்சு கையில ஒண்டும் வயித்தில ஒண்டுமா குழந்தையளோடை தவிச்சுப் போச்சு. இனி... ஒரு இளம் பெட்டை துணைக்கு ஆளில்லாமல் இருந்தால் இந்த சமுதாயத்தின்டை களிசடைகள் என்ன செய்வாங்கள் எண்டு தெரியும்தானே....? அப்படி ஒரு அசம்பாவித நேரத்திலதான் தற்செயலா நான் உதவி செய்து அவளைக் காப்பாத்த வேண்டி வந்துது...

பிறகு... இடையிடை உதவியள் செய்து பாதுகாப்பா இருந்தன். தொடர்ந்து நான் இப்பிடி உதவிக்கு நிக்கேலா இல்லையோ...? அவளுக்கும் கட்டாயம் ஒரு உதவி தேவை. வேற கல்யாணம் கட்டி வைக்கலாம் எண்டும் கேட்டுப் பார்த்தன். மறுத்திட்டா. பிறகுதான் யோசிச்சன்... நாட்டுக்குப் பாரமா இருக்கிறதை விடவும் ஒரு மாவீரனின்டை குடும்பத்தை பத்திரமாகப் பார்க்கலாமே எண்டு. முதல்லை காவேரி மாட்டன் எண்டுட்டா. பிறகு..., நான் உதவிக்குப் போக, சனமும் நாலு விதமாகப் பேசும். எல்லாத்தையும் யோசிச்சு நாங்கள் கலியாணம் கட்டினம்... இப்ப அவைக்கு நான் பாதுகாப்பு... எனக்கு அவை பாதுகாப்பு...''



''அது சரி மச்சான்! தகப்பன் மாவீரன் ஆகின நேரம் மூத் தவனுக்கு நினைவறியா வயசு. இளையவன் பிறக்கவே இல்லை. அப்ப.... நீ வந்ததுக்குப் பிறகு உன்னை 'அப்பா' எண்டுதானே கூப்பிட வேணும்? ஏன் பெரியப்பா எண்டு கூப்பிடுகினம்... ? ஆர் இப்பிடி சொல்லிக் குடுத்தது....?

''நான்தான் மச்சான்.... அவங்கட தகப்பன் ஒரு உண் மையான போராளி நாட்டுக்காக உயிரைக் குடுத்தவன்... அவன் உசரத்தில இரிக்கான்.... அவன் இடத்தை நான் தட்டிப் பறிக்கலாமா?.., அவனை பிள்ளைகள் மறக்க கூடாது. எப்பவும் உயர்ந்த இடத்திலயே வைச்சுப் பார்க்க வேணும். நான் அந்த வெற்றிடத்தை நிரப்ப வந்தவன்... கிட்டத்தட்ட ஒரு காவலாளி அதனாலதான் நான் பெரியப் பாவா நிக்கிறன்....''

''கூப்பிட மட்டும்தான் அப்படி மற்றபடி, பாசத்தை அள்ளிக் குடுக்கிறன்... எந்தக் குறையும் இல்லாமல் பார்த் துக் கொள்ளுறன்.காவேரி ஒரு நல்ல நண்பியாக இரிக்கா. வேற என்ன வேணும்,.. ஹப்பி ஃபெமிலி என்று சிரித்தான் வெங்கி.

'ஓ..! இவ்வளவு நடந்திருக்கா இவன்டை வாழ்க்கை யில்..?' வெங்கியை நினைக்க பெருமையாக இருந்தது.

வைத்தியசாலையை அடையும் வரை இருவரும் பேசி க்கொள்ளவில்லை. அவரவர் யோசனைகளில் மூழ்கியபடி வைத்தியசாலையை அடைந்தனர்.

'சாந்தி கண்ணை முழிச்சிருப்பாள். சாப்பிட்டாளோ இல்லையோ. ஏற்கனவே அவளுக்கு ஆஸ்பத்திரி மணம் ஒத்துக்கொள்ளாது. சத்தி வாற மாதிரி இருக்கும் என்னு வாள்'ஆனந்தன் மனதில் பலதும் பத்துமான யோசனைகள் ஓடின.

அவசர சிகிச்சைப் பிரிவில் சாந்தி இருந்த அறைக்கு வெளியே பரபரப்புக் காணப்பட்டது. ஸ்ரெதாஸ்கோப்பை கழுத்தில் தொங்க விட்டபடி ஒன்றிரண்டு வைத்தியர்கள் சாந்தி இருந்த அறைக்கு விரைவது தெரிந்தது. ஆனந்தன் பதறிப்போனான். ஓட்டமும் நடையுமாக விறாந்தையைக் கடந்து விரைந்து வந்தான்.

'ஐயையோ! என்னவோ பிரச்சனை போலக் கிடக்கு சாந்திக்கு என்னவோ நடந்திருக்கு'

அறையைத் திறந்து அவசரமாக வெளியே விரைந்த மருத்துவத் தாதியரை மறித்து 'என்ன நடக்குது?. என்ரை மனைவிக்கு என்ன பிரச்சனை?' என்று பதட்டமாக வின வியவனுக்கு நின்று பதில் சொல்ல ஒருவருக்கும் நேரம் இருக்கவில்லை.

'எமேஜென்ஸி! தள்ளி நில்லுங்கோ. இப்ப ஒருத்தரையும் டிஸ்ரேப் பண்ண வேண்டாம்' கையில் ஊசிமருந்துகள் அடங்கிய தட்டுடன் வந்த ஒரு தாதி நிற்காமலே கூறியபடி அறைக்குள் விரைந்தார். ஆனந்தனுக்கு ஒன்றுமே புரிய வில்லை. வெங்கி 'ரிஸப்சனில்' கேட்டு வருகிறேன் என்று அவசரமாகப் போய்விட்டான்.

அவசர சிகிச்சை அறையின் கதவினூடு வெளியில் இருந்தபடி உள்ளே பார்த்தான் ஆனந்தன். சாந்தி ஒட்சிசன் மாஸ்க் அணிந்தபடி படுத்திருந்தாள். ஒரு பக்கம் சேலைன் ஏறிக்கொண்டிருந்தது. அவள் விழித்திருப்பதாகத் தெரிய வில்லை. கட்டிலைச் சுற்றி இரண்டு வைத்தியர்கள் நின்று கொண்டிருந்தனர். மூன்று மருத்துவத் தாதியரும் அங்கு இருந்தனர். வைத்தியர் சொல்பவற்றை தலையசைத்து கேட்டுக் கொண்டனர். ஒரு தாதி இரத்த அழுத்தத்தை பரிசோதிக்கும் இயந்திரத்தை இழுத்து வந்து சாந்தியை சோதித்தார். ஒரு பதிவேட்டில் அவர் எழுதியதை வாங்கிப் பார்த்த வைத்தியர் மேலும் சில அறிவுறுத்தல்கள் வழங் குவது தெரிந்தது.

ஆனந்தனுக்கு மண்டையே வெடித்துவிடும் போல் இருந் தது. இனம் புரியாத பயம் அவனைச் சூழ்ந்து கொள்ள கதி கலங்கிப் போனான். வெங்கி திரும்ப வந்தான்.

''மச்சான்! அவை அவசர சிகிச்சை எண்டு மட்டும்தான் சொல்லுகினம் பெரிய டொக்ரர் வந்து பார்த்த பிறகு அவரே விளக்கமா சொல்லுவாராம். அதுகும் உன்னட்டைத்தான் சொல்லுவினமாம்...''

சிறிது நேரத்தில் ஒரு வைத்தியர் மாணவ வைத்தியர்கள் புடைசூழ விரைந்து வந்தார். அவர்தான் பெரிய வைத் தியராக இருக்க வேண்டும். அவ்வளவு பேரும் சாந்தி இருந்த அறையினுள் போனார்கள். வைத்தியர் சாந்தியின் மூடியிருந்த கண்மடலை திறந்து பார்த்தார். ஸ்ரெத்தை வைத்து இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு எல்லாம் பார்த்தார். கை விரல்களைப் பற்றி ஏதோ பரிசோதித்தார். நன்றாக இருந்த காலின் அடிப்பகுதியில் தட்டிப் பார்த்தார். பதிவேட்டை எடுத்து பரிசோதித்தார். இவ்வளவும் செய் யும்போது அவரது வாய் அறிவுறுத்தல் கொடுத்தபடி இருந்தது. மாணவ வைத்தியர்கள் கவனமாகக் கேட்பதும் கையேட்டில் குறிப்பெடுப்பதுமாக இருந்தனர்.

ஏகனவே அங்கு நின்ற வைத்தியர்கள் ஏதோ சந்தேகம் கேட்பதும் அதற்கு அவர் பதிலளிப்பதும் தெரிந்தது. இறு தியில் பெரிய வைத்தியர் மருத்துவத் தாதி ஒருவருக்கு அறிவுறுத்தல் வழங்கினார். இறுதியில் பழையபடி மாண வர் புடைசூழ வெளியில் வந்தார். பதட்டத்துடன் நின்ற ஆனந்தனையும் வெங்கியையும் பார்த்து,

''இதில ஆர் பேஷன்டின்ரை உறவினர்..?'' என்றார்.

''நான்தான் அவவின்ர கணவன் அவவுக்கு என்ன பிரச்சனை டொக்ரர்..? ஒருத்தரும் ஒண்டும் சொல்லுகின மில்லை...'' பதட்டத்துடன் வினவினான் ஆனந்தன்.

''அவாக்கு காலமை ஒரு தரம் வலிப்பு வந்திட்டுது... அது அவ்வளவு மோசமில்லை. காய்ச்சல்தான் குறையவே இல்லை. இந்த நிலையில இப்ப பிறகும் ஒரு வலிப்பு கொஞ்சம் மோசமா வந்திட்டுது...''

''ஐயையோ..! அவ இப்ப நல்லாத்தானே இருக்கிறா? பிரச்சனை இல்லைத்தானே?'' பயத்துடன் கேட்டான் ஆனந்தன்.



''இப்போதைக்கு அவ ஓகே.. காய்ச்சல் கடுமையா இருக்கிறதும்.. அதோட ஃபிட்ஸ் வாறதும்... பிரச்சனை இல்லை என்று சொல்ல ஏலாது... இப்ப நாடு முழுக்க மருந்து தட்டுப்பாடான நேரம்... அவசரத்துக்கு மருந்து கிடைக்காது... நிமோனியா குறையாதது கொஞ்சம் கிறிட்டிக்கல்தான் நாங்கள் முழு முயற்சி செய்யிறம். நாளைக்கிடையில காய்ச்சல் குறைஞ்சால் பிறகு பிரச்சனை இருக்காது. நாளை வரைக்கும் பொறுத்துப் பார்ப்பம்...'' கலங்கிப்போய் நின்றிருந்த ஆனந்தனின் தோளில் தட்டிவிட்டு சென்றார் வைத்தியர்.

என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்தான் ஆனந்தன். அவனை எப்படித் தேற்றுவது என்று புரியாமல் அருகில் அமர்ந்தான் வெங்கி. எவ்வளவு நேரம் கடந்ததோ! அவசர சிகிச்சைப் பிரிவு வைத்தியர் ஒருவர் வந்தார்.

''இப்ப அவ பிரச்சனையான கட்டத்தைக் கடந்திட்டா அன்ரிபயற்றிக்கும் சேலைனும் ஏறுது. அவ சரியான வீக்கா இருக்கிறா இப்பிடியே போனா காய்ச்சல் குறைஞ்சிடும்... இங்க இருந்து நீங்கள் என்ன செய்யப் போறியள்? காலையில வாங்கோ....! பெரிய டொக்டர் பார்த்து என்ன செய்யிறது எண்டு சொல்லுவார்...'' என்றார்.

மீண்டும் ஒரு தடவை சாந்தியை எட்டிப் பார்த்துவிட்டு, மனமே இல்லாமல் வீட்டுக்குப் புறப்பட்டான் ஆனந்தன். மருத்துவமனையின் இன்னுமொரு அறையில் இப்போது ஆரவாரமாக இருந்தது. வைத்தியர்களும் தாதிமார்களும் அங்கு விரைய, வெளியில் ஒரு பெண் அழுதபடி நின்று கொண்டிருந்தார். இரண்டு மூன்று காவற்துறையினரும் அங்கிருந்தனர்.

'ஒரு தலைக் காதலாம் மாறி மாறி வெட்டுப்பட்டவையாம்..' என்றனர் ஒரு சாரார். 'ஹல்மெற் போடாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டி கட்டுப்பாட்டை இழந்து மரத்தில மோதினதாம் தப்புறது கஷ்டம் என்னுகினம்..'என்று இன்னொரு சாராரும் பேசிக்கொண்டனர்.

வழமைபோல் என்றால் 'ஐயோ..! இந்த நாடு எங்க போய் முடியப்போகுது இளம் பிள்ளையள் இப்படி இருக்கிறாங்களே' என்று மனம் நொந்திருப்பான் ஆனந்தன். இன்றோ இவை எதுவும் அவன் மனதில் பதியவில்லை. சாந்தியின் உடல்நிலை பற்றிய யோசனையைத் தவிர வேறு எதுவுமில்லை. அண்மைக் காலமாக சாந்திக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போவதும், அவளின் வெளிறிய தோற்றமும் ஏதோ சரியில்லை என்று பட்டது. கடந்த சில வாரங்களாகவே அவன் மனதை அரித்துக் கொண்டிருக்கும் ஒரு கவலை அது.

கடவுள் நம்பிக்கை இல்லாதவன் ஆனந்தன். அதற்காக முழு நாத்திகன் என்றும் கூறிவிட முடியாது. அவனுக்கு நம்பிக்கை வரவில்லை. அவ்வளவுதான். சாந்தி கடவுள் பக்தியுள்ளவள். அவளுக்காக மட்டுமே ஆனந்தன் கோவில்களுக்கு போவான். சாந்தியை மனவருத்தப்பட வைக்க அவனுக்கு விருப்பமில்லை. இன்று உண்மையாகவே கடவுளை வேண்டினான் ஆனந்தன்.

''அம்மாளாச்சி... சாந்தி உனக்கு எத்தினை விரதம் இருந்திருப்பாள்? எத்தினை பொங்கல் பொங்கியிருப்பாள்...? அவளைக் கை விட்டிடாதை... அவளை பத்திரமா என்னட்டை ஒப்படைக்க வேண்டியது உன்ரை பொறுப்பு உனக்கு நான் பொங்கல் வைக்கிறன்....''

இருவரும் நடந்த எதையும் வீட்டில் சொல்லாமல் மறைத்து விட்டார்கள். காய்ச்சல்தான் குறையவில்லை என்பதோடு நிறுத்திக் கொண்டான் ஆனந்தன். காலையில் அவளையும் கூட்டிக் கொண்டு போவதாக வாக்குறுதி கொடுத்த பின்னர்தான் சமாதானமானாள் வெண்ணிலா. வெங்கி குடும்பம் மறுநாள் காலையில் வருவதாகக் கூறி விடை பெற்றது.

இரவுணவையும் காவேரி தயார் செய்திருந்தாள். ஆனந்தனுக்குத்தான் ஒரு பிடி சோறும் தொண்டையில் இறங்க மறுத்தது. வெண்ணிலாவுக்கும் ஏனோ சாப்பிடத் தோன்றவில்லை. ஆனந்தனும் அவளை வற்புறுத்தவில்லை. சாந்தி வீட்டில் இல்லாத மற்றுமொரு இரவு. வீடே வெறுமையாகி விட்டது போன்றதொரு உணர்வு. இருவருக்கும் தூக்கம் வர மறுத்தது. அவர்கள் எல்லோருமாக சந்தோஷமாக இருந்த தருணங்களை மாறி மாறி நினைவுகூர்ந்து கொண்டனர். சாந்தி அவனின் வாழ்வில் முக்கியமானதொரு பங்கு வகிப்பவள் என்பதை ஆனந்தன் எப்போதோ உணர்ந்திருந்தான். ஆனாலும், அவள் இப்போது இங்கு அவர்களுடன் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற தவிப்பு அதிகரித்துச் செல்வதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

கோழி கூவும்வரை இருவருமே கண்ணயரவில்லை. விடிந்ததும் விடியாததுமாக வைத்தியசாலை சென்றுவிட்டார்கள். அங்கு நல்ல செய்தி காத்திருந்தது. சாந்தியின் காய்ச்சல் குறைந்து வருகிறதாம் இரவு கண்விழித்து பேசினாளாம். இப்படியே போனால் ஓரிரு நாட்களில் பொது வான வார்டிற்கு மாற்றி விடுவார்களாம். அதன் பிறகு திடமான சாப்பாடு கொடுக்கலாம் என்றார்கள். எட்டிப் பார்த்தபோது சாந்தி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். பின்நேரம் பார்க்கலாம் என்று வீட்டிற்கு புறப்பட்டனர் இருவரும்.

அப்போது ஃபோனிற்கு ஒரு மெசேஜ் வந்தது.

''அப்பா..! பள்ளிக்கூடம்தான். என்னை இப்ப காலமை வரட்டாம்.'' பெற்றோரிலை ஆரையாவது ஒராளையும் கூட்டிக்கொண்டு வரட்டாம்.

இருவரும் ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள். என்னவாக இருக்கும்...?

**தொடரும்.....**

# கரிநாள்

04/02/2024

76 வது சுதந்திர தின
கொண்டாட்டமாம்
சிறிலங்கா
சுதந்திரம் பெற்ற போது
ஒற்றுமையாக
ஓரணியில் வாழ்வதாய்
பேச்சாம்
அப்படி ஏதும் நடந்ததா?
இல்லையே

தமிழரின் இரத்தம்
குருதிக்காடாய்
தலைநகரில்
ஓடியதை மறந்திடுமா
வரலாறு?

இனக்கலவரங்களையும்,
இயல்பான வாழ்கையை
இழந்தையும்
மறந்திடுமா எம் இனம்?

சிங்களவன் சிந்தை
முழுவதிலும்
அடக்கு முறையும்
இனத்துவேசமும்!

வரலாறு காணாத
வன்முறையை
கட்டவிழ்த்து,
இனத்தை அழித்து,
எம்
இயல்பு வாழ்க்கையை
சிதைத்து,
எம் இனத்தை வேரறுக்கும்
இந்நாள் கரிநாளே
மாற்றுக் கருத்தேதும்
கிடையாது..!!

சிங்களத்தின்
சுதந்திர நாளில்
அமைதியான முறையில்
அகிம்சை வழியில்
அடக்கு முறைக்கு எதிராய்
சுதந்திர தினத்தை
நிராகரித்து
தமிழர்கள் ஓரணியில்
திரண்டனர்.

தமிழரின் கரிநாள்
பேரணி கண்டு
வெகுண்டது சிங்கள அரசு!
உரிமைக்குரல்
எழுப்பியவர்கள்
குரல்வளையை நசுக்க
கண்ணீர் புகைக்குண்டு
வீசினர்

தகாத வார்த்தை பேசி
காட்டு மிராண்டிகள்
போல
எம் செல்வங்களை
கண்முன்னே
இழுத்து.. அடித்து.. உதைத்து
கைது செய்தனரே
சுதந்திர நாடா இது??

மண்ணின் மகத்துவம்
உணர்ந்து
உணர்வு பூர்வமாக
அமைதி வழியில்
எதிர்ப்பைச் சொன்னவர்களை
காட்டுமிராண்டி அரசு
கண்டு கொள்ளவில்லை..!
ஜனநாயகம் என்ற பெயரில்
நடத்தும் நாடகம்
மீண்டும்
உலக அரங்கின்
கண்களுக்கு
காட்சிப்பதிவாகியது.
உலகமே என்ன
செய்யப் போகிறாய்??

யாரும் எமக்காக குரல்
கொடுக்கப் போவதில்லை..
அனுபவத்தின் உண்மை இது.

உரிமைக்கான
எம் குரல் ஒலிக்கட்டும்.

சிறிலங்கா அரசின்
கர்ம வினைகளின்
பாதிப்பு
கண்முன்னே
காண்கின்றோம்!!

சிறிலங்கா அரசே..!
எத்தனை அடக்குமுறைகள்
தொடர்ந்தாலும
உரிமைக்கான
எமது குரல்
ஓங்கி ஒலிக்கும்.

**கலை அழுதினி**



# தமிழின் சிறப்பு



தமிழில் 247 எழுத்துக்களில் 42 எழுத்துக்களுக்குதனியாக பொருள் உண்டு. அது எப்படி என்று பார்ப்போம். தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் 247.

இந்த 247 எழுத்துக்களில் 42 எழுத்துக்கள் ஓரெழுத்து சொல்லாக விளங்குகின்றன. அதாவது இந்த 42 எழுத்துக்களுக்கும் தனியாக பொருள் உண்டு. அவற்றைத் தெரிந்து கொள்வோம்.

| | |
|---|---|
| அ ----- | எட்டு |
| ஆ ----- | பசு |
| ஈ ----- | கொடு, பறக்கும் பூச்சி |
| உ ----- | சிவன் |
| ஊ ----- | தசை, இறைச்சி |
| ஏ ----- | அம்பு |
| ஐ ----- | ஐந்து, அழகு, தலைவன், வியப்பு |
| ஓ ----- | வினா, மதகு - நீர் தாங்கும் பலகை |
| கா ----- | சோலை, காத்தல் |
| கூ ----- | பூமி, கூவுதல் |
| கை ----- | கரம், உறுப்பு |
| கோ ----- | அரசன், தலைவன், இறைவன் |
| சா ----- | இறப்பு, மரணம், பேய், சாதல் |
| சீ ----- | இகழ்ச்சி, திருமகள் |
| சே ----- | எருது, அழிஞ்சில் மரம் |
| சோ ----- | மதில் |
| தா ----- | கொடு, கேட்பது |
| தீ ----- | நெருப்பு |
| து ----- | கெடு,உண்,பிரிவு,உணவு,பறவை இறகு |
| தூ ----- | வெண்மை, தூய்மை |
| தே ----- | நாயகன், தெய்வம் |
| தை ----- | மாதம் |
| நா ----- | நாக்கு |
| நீ ----- | நின்னை |
| நே ----- | அன்பு, நேயம் |
| நை ----- | வருந்து, நைதல் |
| நொ ----- | நொண்டி, துன்பம் |
| நோ ----- | நோவு, வருத்தம் |
| நௌ ----- | மரக்கலம் |
| பா ----- | பாட்டு, நிழல், அழகு |
| பூ ----- | மலர் |
| பே ----- | மேகம், நுரை, அழகு |
| பை ----- | பாம்புப் படம், பசுமை, உறை |
| போ ----- | செல் |
| மா ----- | மாமரம், பெரிய, விலங்கு |
| மீ ----- | ஆகாயம், மேலே, உயரம் |
| மு ----- | மூப்பு |
| மூ ----- | மூன்று |
| மே ----- | மேன்மை, மேல் |
| மை ----- | அஞ்சனம், கண்மை, இருள் |
| மோ ----- | முகர்தல், மோதல் |
| யா ----- | அகலம், மரம் |
| வா ----- | அழைத்தல் |
| வீ ----- | பறவை, பூ, அழகு |
| வை ----- | வைக்கோல், கூர்மை, வைதல், வைத்தல் |
| வௌ ----- | கௌவுதல், கொள்ளை அடித்த |

**இது எங்கள் மொழிக்கே**
**உரித்தான சிறப்பல்லவா?**
**வாழ்க தமிழ்!! வளர்க தமிழ்!!**







## பல ஏக்கங்களுடன் விடைபெற்ற சாந்தனுக்கு அஞ்சலிகள்

